இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 205 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 23 – புதன்கிழமை 06 மார்ச் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 205 : Thiruvalluvar Year - 2055 - Maasi 23 - Wednesday 06 March 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

### திட்டங்களின் பயன்களை உறுதி செய்திட “நீங்கள் நலமா?” புதிய திட்டம் இன்று தொடக்கம்! ‘திராவிட மாடல்’ அரசு

# அறிவிப்புகளை அரசாணைகளாக மாற்றிச் செயல்படும் அரசு!

## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**மயிலாடுதுறை, மார்ச் 6-**

**மயிலாடுதுறையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, “திட்டங்களின் பயன்கள் எல்லாம் உரிய மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா? என்பதை உறுதி செய்ய ‘நீங்கள் நலமா?’ எனும் புதிய திட்டம் இன்று தொடங்கப்படுகிறது” என்றும், “திராவிட மாடல் அரசு அறிவிப்புகளை அரசாணையாக மாற்றி செயல்படும் அரசு” என்றும் கூறினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறையில் தரைத்தளம் மற்றும் ஏழு தளங்களுடன் 114 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை திறந்து வைத்தார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், எஸ்.இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், மயிலாடுதுறை மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் திறப்பு விழா, மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

மண் மணத்துடன் நெல் மணமும் கலந்து வீசும் வண்டல் நிலமும், அழகும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் அரசு நலத்திட்டங்கள் வழங்கக்கூடிய விழா மற்றும் மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் திறப்பு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு சிறப்பான பேறுபெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!

**மாவட்டத்தின் சிறப்புகள்!**

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கீழத்தஞ்சைக்கு உட்பட்ட இந்த மூன்று மாவட்டங்களில் மயிலாடுதுறை காவிரி பாசனத்தால் வேளாண்மை செழிப்புடன் இருக்கின்ற மாவட்டம்!

புகழ்பெற்ற பழமையான திருக்கோயில்கள் பல நிறைந்திருக்கின்ற மாவட்டம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட பூம்புகார் எழுநிலை மாடத்தையும், சிற்பக் கலைக்கூடத்தையும் கொண்ட மாவட்டம் இந்த மயிலாடுதுறை மாவட்டம்!

மொழிப்போர்த் தியாகி சாரங்கபாணி,

தமிழில் புதினத்தை எழுதிய முன்சீப் வேதநாயகம், இந்தியா விடுதலை பெற்ற நாளில், புதுடெல்லியில், நாதசுரம் வாசித்த திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் ஆகியோரது மாவட்டம்.

அதுமட்டுமல்லாமல், தியாக மங்கை தில்லையாடி வள்ளியம்மை, சுயமரியாதைச் சுடரொளி மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் ஆகியோரின் மாவட்டம்! அதனால்தான், சாரங்கபாணி மேம்பாலம், தில்லையாடி வள்ளியம்மை நினைவு இல்லம் ஏற்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், மூவலூர் மூதாட்டியாருக்கு சிலை அமைத்து, அவரது பெயரில் புதுமைப் பெண் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது நம்முடைய திராவிட மாடல் அரசு!

அதுமட்டுமல்ல, முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி, தமிழிசை மூவர் மணிமண்டபம் போட்டித் தேர்வு மாணவர்களுக்கு ஏற்ப புனரமைக்கும் பணி போன்றவை நடைபெற்று வருகிறது.

இப்படி இந்த மாவட்டத்தின் சிறப்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அதன் தொடர்ச்சியாக, நாகை மாவட்டத்தில் இருந்து புது மாவட்டமாக உதயமான இந்த மயிலாடுதுறைக்கு, நாம் ஆட்சிக்கு வந்தவுடன் நிதி ஒதுக்கி, நிர்வாக ஒப்புதல் வழங்கி, ஒன்றரை ஆண்டுக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைத் திறந்து வைப்பதில் கூடுதல் பெருமை. புது மாவட்டங்கள் அறிவிப்பது பெரிது இல்லை, அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதுதான் மிகமிக முக்கியமானது.

**தி.மு.கழக ஆட்சியில் உள்கட்டமைப்பு வசதிகள்!**

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்டத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தி.மு.க. ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டவை. அதன் தொடர்ச்சியைத் தான், உங்கள் அரசான, நமது அரசான இந்த திராவிட மாடல் அரசும் இதை செய்திருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டு தான் இன்றைய விழா!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### ஒவ்வொரு குடும்பமும் பயனடைகின்ற வகையில்

# ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகள்!

எல்லோருக்கும் எல்லாம் என்று சொல்லவேண்டும் என்றால், இப்படி, எல்லோருக்கும் எல்லா வாய்ப்புகளும் கிடைக்கின்ற வகையில்தான் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறோம். அதனால்தான், தி.மு.க. அரசு, நம்முடைய அரசு என்ற அடிப்படை உணர்வு இங்கே இருக்கின்ற உங்கள் ஒவ்வொருவர் மனதிலேயும் ஏன், தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொருவருடைய மனதிலும் அது உருவாகியிருக்கிறது!

தாய்மார்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். இன்று நம் தமிழ்நாட்டில், ஒரு கோடியே 15 இலட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கிடைக்கிறது. அதுமட்டுமல்லாமல், “விடியல் பயணத் திட்டம்” மூலமாக 445 கோடி முறை பயணித்து மாதந்தோறும் 888 ரூபாய் வரை நமது சகோதரிகள் சேமிக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் நாள்தோறும் 16 இலட்சம் குழந்தைகள் வயிறார சாப்பிட்டு, வளமான தலைமுறையாய் உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் “புதுமைப்பெண்” திட்டம் மூலமாக 4 இலட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் போய்ச் சேருகிறது.

இரண்டே ஆண்டுகளில், ‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக 28 இலட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

‘இல்லம் தேடிக் கல்வி’ திட்டம் மூலமாக 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

2 இலட்சம் உழவர்களுக்கு புதிய இலவச மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். உயர்த்தப்பட்ட ஒய்வூதியத்தில் 30 இலட்சம் முதியோரும்,

5 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் மாதந்தோறும் பயனடைந்து கொண்டு வருகிறார்கள்.

‘நம்மைக் காக்கும் 48’ திட்டம் மூலமாக 2 இலட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

“முதல்வரின் முகவரி திட்டம்” மூலமாக 19 இலட்சத்து 69 ஆயிரம் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

**மக்களின் மனசாட்சியாக திராவிட மாடல் அரசு!**

‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் மூலமாக, 3 இலட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. வேளாண் பெருங்குடி மக்கள் நிறைந்த இந்த மயிலாடுதுறை மாவட்டத்தில், 2021முதல் 2024 வரை பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட 1 இலட்சத்து 3 ஆயிரத்து 614 ஹெக்டேர் நிலங்களுக்கு 96 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இது மூலமாக 1 இலட்சத்து 26 ஆயிரத்து 400 உழவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

“மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தால் ஒரு கோடி பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

இப்படி, தமிழ்நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு குடும்பமும் பயனடைகின்ற வகையில், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி மக்களின் மனச்சாட்சியாக செயல்படுகிறது, நம்முடைய திராவிட மாடல் அரசு!

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**
மயிலாடுதுறை மாவட்ட
ஆட்சியர் அலுவலகத் திறப்பு விழா
4.3.2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 06-03-2024

# எந்தத் திட்டத்துக்கு தடை போட்டோம்?- 2

**3. வெள்ள நிவாரணம்**

சென்னையைச் சுற்றிய மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் 3 ஆம் தேதி பெய்த மழையால் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. டிசம்பர் 17,18 ஆம் தேதிகளில் தென் மாவட்டத்தில் மழை, வெள்ளம் சூழ்ந்தது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத்தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் முதலில் கேட்டார்கள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப்படவில்லை. எனவே, அவசர நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடி தர வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கேட்டார்கள். ஆனால் அவை தரப்படவில்லை. பிரதமர் அவர்களிடம் டெல்லிச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவே கோரிக்கை வைத்தார்கள். அதாவது, டிசம்பர் 19 ஆம் தேதி அன்றே இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். ஒன்றிய நிதி அமைச்சர் இங்கு வந்து பார்த்துச் சென்றார். அவரிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒன்றியக் குழு மூன்று நாட்கள் தங்கி ஆய்வை நடத்தியது. அவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இந்த கோரிக்கைகளை வைத்தார். பின்னர் சேதங்கள் முழுமையாக அளவிடப்பட்டு 37 ஆயிரம் கோடி நிதி கேட்டது தமிழ்நாடு அரசு. இதுவரை இந்த நிதி தரப்படவில்லை.

**தூத்துக்குடிக்கு வந்த பிரதமர் வெள்ளச் சேதப் பகுதிகளை பார்த்தாரா? இல்லை. நெல்லைக்கு வந்த பிரதமர், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்தாரா? இல்லை. தேர்தல் ஸ்டண்டாகக் கூட, அங்கே பேசும் போது, நிதி தருகிறேன் என்று அறிவித்தாரா என்றால் அதுவும் இல்லை. ஆனால் தமிழ்நாடு ஒத்துழைக்க மறுக்கிறது என்று எதை வைத்துச் சொல்கிறார்?**

**4. நிதி ஒதுக்குவதில் பாரபட்சம்**

ஒரு ரூபாயை தமிழ்நாட்டில் இருந்து பெற்றால் அதில் இருந்து 29 பைசாவைத்தான் திரும்பத் தருகிறது பா.ஜ.க.

வரி வருவாய் நிதியானது மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதில் முடிந்தவரை தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு துரோகம் இழைத்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஒவ்வொரு முறை நிதி ஒதுக்கீடு செய்யும் போதும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அள்ளித் தரப்படுகிறது. தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு கிள்ளித் தரப்படுகிறது. இதுதான் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த காலம் முதல் நடக்கிறது.

26.2.2022 ஆம் நாள் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும் போது, **“தமிழ்நாடு பலவகைகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு. ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு. ஆனால் ஒன்றிய அரசின் வரி வருவாயில் தமிழ்நாட்டுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே. எனவே தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள் அளிக்கக் கூடிய பங்குக்கு ஏற்ப நிதி வழங்க வேண்டும்”** என்று கேட்டுக் கொண்டார்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் 1.42 லட்சம் கோடி ரூபாயை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதில் அதிகபட்சமாக பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசத்துக்கு 25 ஆயிரத்து 495 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை 5 ஆயிரத்து 797 கோடி மட்டும்தான்.

பீகார் மாநிலத்துக்கு தரப்பட்டுள்ள தொகை 14 ஆயிரத்து 295 கோடி ரூபாய். மத்தியப் பிரதேச மாநிலத்துக்கு 11 ஆயிரத்து 157 கோடி ரூபாய் தரப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்துக்கு 8 ஆயிரத்து 978 கோடி ரூபாய் தரப்பட்டுள்ளது. அவர்களுக்கு எல்லாம் ஏன் கொடுக்கிறீர்கள் என்று நாம் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். ஆந்திராவுக்கும் கர்நாடகாவுக்கும் 5 ஆயிரம் கோடி வரை தந்துள்ளார்கள். கேரளாவுக்கு 2 ஆயிரத்து 736 கோடிதான் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கேரள முதலமைச்சர், டெல்லிச் சென்று ஏன் போராடினார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஒன்றிய அரசின் சார்பில் தொடங்கப்படும் திட்டங்களில் செய்யப்படும் ஓரவஞ்சனையை பிரதமர் முன்னிலையில் ஒரு முறை முதலமைச்சர் விவரித்தார்.

**“ஒன்றிய அரசு தனது திட்டங்களுக்கான நிதிப்பங்கை தொடக்கத்தில் அதிகமாக அளித்தாலும், காலப்போக்கில் தனது பங்கினைக் குறைத்து. மாநில அரசு செலவிட வேண்டிய நிதிப் பங்கை உயர்த்தும் நிலையைப் பார்க்கிறோம். ஒன்றிய மாநில அரசுகளின் பங்களிப்போடு, பயனாளிகளின் பங்கையும் முன்னிறுத்தி, பல திட்டங்கள் ஒன்றிய அரசால் செயல்படுத்தப் படுகிறது. இதில் அந்தத் தொகையை பயனாளிகள் செலுத்த முடியாதபோது, மக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிற மாநில அரசுகள்தான் பயனாளிகளின் பங்களிப்பையும், சேர்த்து செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் மாநில அரசின் நிதிச் சுமை அதிகரிக்கிறது”** என்று சுட்டிக்காட்டினார் முதலமைச்சர் அவர்கள். அதுதான் சென்னை மெட்ரோ திட்டத்தில் நடக்கிறது.

ஜி.எஸ்.டி.க்குப் பிறகு ஒன்றிய அரசிடம் இருந்து கிடைக்கும் வரிப் பகிர்வுதான் மாநில நிதிக்கு மிகமிக முக்கியமானது ஆகும். அதனை முறையாக ஒழுங்காக தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு வழங்குவது இல்லை. நிதிப்பகிர்வை முறையாக ஒழுங்காகச் செய்கிறோம் என்று பிரதமர் பேசினாரா? இல்லை. தமிழ்நாட்டுக்கு எவ்வளவு நிதி கொடுத்துள்ளோம் என்பதை அவர் பேச வேண்டியதுதானே?

*- தொடரும் -*




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் கிராம நத்தம் பகுதிகளுக்கு இணையவழியில் பட்டா மாறுதல் சேவைகள் வழங்குவதற்கான நத்தம் இணையவழி பட்டா மாறுதல் திட்டம் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, பயனாளிகளுக்கு நத்தம் பட்டா மாற்றத்திற்கான ஆணையினை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# ஓரவஞ்சனைகளைத் தோலுரித்த நமது பேச்சாளர்கள்!

### சமூகவலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, மார்ச் 6 –**

**‘எல்லோருக்கும் எல்லாம்’ திராவிட மாடல் நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள் தமிழ்நாடெங்கும் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கொப்ப, அக்கூட்டங்கள் கடந்த 2, 3 மற்றும் 4 ஆகிய நாட்களில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளன.**

ஒவ்வொரு இடங்களிலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு, கழக முன்னோடிகளின் உரைகள், கருத்து விளக்கங்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

இக்கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததையொட்டி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப்பதிவில், ‘திராவிட மாடல்’ அரசின் நலத்திட்டங்களை எடுத்துச் சொல்லி, ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனைகளைத் தோலுரித்தனர், நமது பேச்சாளர்கள் - எனப் பாராட்டியுள்ளார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**எல்லோருக்கும் எல்லாம்**

**161 பொதுக்கூட்டங்கள்,**

**90 பேச்சாளர்கள்,**

**இலட்சக்கணக்கான மக்கள்!**

**தமிழ்நாட்டை வளமாக்கும் நமது** #TNInclusiveBudget**ஐ விளக்கும் பொதுக்கூட்டங்கள்!**

**#’திராவிடமாடல்’ அரசின் நலத் திட்டங்களை எடுத்துச்சொல்லி, ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனைகளைத் தோலுரித்த நமது பேச்சாளர்கள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கழக அரசின் சாதனைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்

# பொய்ப்பிரச்சாரம் செய்கிறார் எடப்பாடி பழனிசாமி!

## கடலூரில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**கடலூர், மார்ச் 6 –**

**“தி.மு.க. அரசின் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்து பேட்டி அளித்துள்ளார்.**

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் (04.03.2024) கடலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகம் உள்ளது போல, எடப்பாடி பழனிசாமி பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார். தங்களது கூட்டணிப் பிரச்சினைகளைக் கையாள முடியாமல், யார் வருவார் எனக் காத்திருக்கும் அவர், தி.மு.க. மீது அவதூறுகளைப் பேசி வருகிறார்.

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையை அனைத்துத் தரப்பினரும் மனதாரப் பாராட்டி உள்ளனர். இதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல், எடப்பாடி பழனி சாமி ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்.

நாட்டிலேயே, முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதை அவர்களால் ஏற்க முடியவில்லை.

**குஜராத்தில்தான் அதிக போதைப்பொருள்!**

அண்ணாமலை ஏதோ தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள் அதிகம் இருப்பது போல பேசுகிறார், இந்தியாவிலேயே அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட மாநிலம் குஜராத். அதானிக்குச் சொந்தமானதுறைமுகத்தில் தான் இந்தியாவினுடைய மொத்த போதைப் பொருள் கடத்தலும் நடக்கிறது என்று அனைத்துத் தரப்பினரும் கூறுகிறார்கள். இந்தியா முழுக்கப் போதைப் பொருள் பரவலுக்குக் காரணம் பாஜ.க.தான்.

போதைப் பொருள் விற்பனையில் பா.ஜ.க. தலைவர்கள் பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. பஞ்சாப் ஷோந்தி (23 கிலோ heroin வழக்கு) இவர் 12 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றவர். அவரை அமித்ஷா கட்சியில் சேர்க்கிறார். அதேபோல பா.ஜ.க. எம்.பி.,யின் மகன் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு இருந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

இந்தச் சூழலில் எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு அரசுக்கு எதிராகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் குட்கா வழக்கில் பலரும் சிக்கினர். யார் யார் எவ்வளவு லஞ்சம் வாங்கினார்கள் என்பது பத்திரிகைகளில் வந்தது.

கட்சியைச் சேர்ந்த ஒருவர், போதைப் பொருள் புழக்கம் தொடர்பாகச் செயல்பட்டார் எனக் கேள்விபட்டவுடன், அடுத்த, 24 மணி நேரத்தில் அவரை கட்சியில் இருந்து நீக்கி நடவடிக்கை எடுத்தது தி.மு.க. ஆனால், எடப்பாடி பழனிசாமி அப்படி செய்தாரா?

கடலூர் எம்.பி., மீது கூட ஒரு வழக்கு வந்தது. அவரையும் கட்சி காப்பாற்றவில்லை. அவர் சட்ட ரீதியாக வழக்கைச் சந்தித்து வருகிறார்.

**நினைத்ததை பேசும் பிரதமர் மோடி!**

தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சி மீது குறை சொல்ல முடியாமல், பிரதமர் மோடி நினைத்ததை எல்லாம் பேசுகிறார். அதற்கு எடப்பாடி பழனிசாமி துணைபோகிறார்.



2016 தேர்தலில் கன்டெய்னர் லாரியில் பெரும் பணம் சிக்கியது. தி.மு.க. வழக்குத் தொடுத்தது. அது தொடர்பான சி.பி.ஐ. விசாரணையைத் தொடர்ந்து தாமதப்படுத்துகின்றனர்.

தேர்தல் நெருங்கும் நிலையில், தி.மு.க. கூட்டணியைச் சிதைக்க முயற்சித்தார்கள்; அது நடக்கவில்லை. கூட்டணி வலுவாகத் தொடர்கிறது. இதனை தாங்கிக் கொள்ள முடியாமல் தவறான பிரச்சாரம் செய்கின்றனர்.

நகராட்சித் தேர்தலுக்கு வருவது போல பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். அவருக்கு ரோஷம் ஏற்பட்டு, மழை நிவாரண நிதியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கும் அறிவிப்பை இன்று மாலை வெளியிடுவாரா எனப் பார்க்கலாம்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்துப் பேசியது பின்வருமாறு:

**கல்பாக்கம் ஈனுலை: தமிழ்நாடு ஏற்கவில்லை!**

கல்பாக்கத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஈனுலை தொடர் பான விவகாரத்தில் அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்றார். மேலும், இது தொடர்பான நிகழ்வில் முதலமைச்சர் பங்கேற்காதது, அதனை ஏற்கவில்லை என்பதை காட்டுகிறது எனக் குறிப்பிட்டார்.

ஸ்டெர்லைட் ஆலையைத் தடுக்கும் நடவடிக்கைகளில் தி.மு.க. செயல்பட்டது. அதுபோல, கல்பாக்கம் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்போம். தமிழ்நாடு மக்கள் ஏற்காததை நாங்கள் ஏற்க மாட்டோம் என்றார்.

தி.மு.க. கூட்டணியில் பிளவு இல்லை. நாளை மாலைக்குள் கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்து விடும் என நினைக்கிறேன். 7ஆம் தேதிக்குள் தேர்தலுக்கு முழுமையாக தயாராகி விடுவோம்.

இ.வி.எம். இயந்திரத்தில் முறைகேடுகளைத் தடுக்கத் தேர்தல் ஆணையத்தில் பல புகார்கள் தந்து உள்ளோம்.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.



தி.மு.க.வை வளர்த்தவர்களில் ஒருவரும், கழக மூத்த முன்னோடியும், முன்னாள் அமைச்சரும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் செயலாளருமாக இருந்து நினைவில் வாழும் புரவலர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள அவரது சிலைக்கு, பள்ளி கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாநகரச் செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, கோவிந்தராஜன், குணசேகரன், மாமன்ற உறுப்பினர் செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், மோகன், விஜயகுமார், ராஜ்முஹம்மது, மணிவேல், பாபு, சிவக்குமார், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், கிளை, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தலில் நடைபெற்ற அரசு விழாவில், 114 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மயிலாடுதுறையில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 308 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 70 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 88 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 40 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், எஸ். இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரும், காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பதவி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள ஆதரவு கேட்டு வருபவர்களைப் பார்த்து

# தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாற மாட்டார்கள் !

**முதல்வர் உரை...** முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைய நிகழ்ச்சியில், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு, 655 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்டிருக்கிறது.

மொத்தம் 12 ஆயிரத்து 653 பயனாளிகளுக்கு, 143 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல, அறிவிப்புகளை அரசாணைகளாக மாற்றும் அரசு இந்த அரசு! அரசாணைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யும் அரசு இந்த அரசு!

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை வருவாய் வட்டங்களை சீரமைத்து, திருவோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் 7 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்று 2022-2023ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், 27.02.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, இங்கே வருவதற்கு முன்னால், நேற்றைய முன்தினம் அரசிதழிலும் அது வெளியிடப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவோணத்தை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் வட்டம் இன்று முதல் செயலாக்கத்திற்கு வருகிறது என்று மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கணினி மூலம் உறுதி செய்யும் பட்டா வழங்கும் திட்டம்!**

அடுத்து, இன்னும் ஒரு மிக முக்கியமான திட்டத்தையும் இங்கே தொடங்கி வைத்திருக்கிறேன். "நத்தம் இணையவழி பட்டா மாறுதல் திட்டம்" என்று இதற்குப் பெயர். கிராமப்புற மக்கள், அவர்களுடைய நத்தம் வீட்டுமனைக்கு பட்டா வாங்குவதில் சில சிரமங்களைச் சந்தித்து வருவதாக தெரிய வந்தது. அதை எளிமையாக்குவதுதான் இந்த புரட்சிகரமான திட்டம்!

**தமிழ்நாடு வருவாய்த்துறை வரலாற்றிலேயே, கிராமப்புற நத்தம் பட்டாவை கணினி மூலமாக வழங்குவது இதுதான் முதல்முறை! காணி நிலம் வேண்டும் என்று மகாகவி பாரதியார் பாடினார். அதைக் கணினி மூலமாக உறுதி செய்கின்ற திட்டம் இது!**

**முதல்கட்டமாக, 75 இலட்சத்து 33 ஆயிரத்து 102 பட்டாதாரர்கள் இந்த இணையவழி சேவை மூலமாக பயன்பெற போகிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், இந்த விழாவில் இன்னும் சில அறிவிப்புகளை வெளியிடுவதில் கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**150ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து, சிறப்பாக செயல்பட்டு வருகின்ற மயிலாடுதுறை நகராட்சிக்கு, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நகராட்சி கட்டடம் கட்டப்படும்.**

**அதேபோல, வேளாண் பெருங்குடி மக்களுடைய நீண்டகால கோரிக்கைகளை ஏற்று, சீர்காழி வட்டம் பெருந்தோட்டம் கிராமத்தில் செல்லனாற்றின் குறுக்கிலும், சென்னம்பட்டினம் கிராமத்தில் முல்லையாற்றின் குறுக்கிலும், தரங்கம்பாடி வட்டம் சந்திரப்பாடி கிராமத்தில் நண்டலாற்றின் குறுக்கிலும், உப்பு நீர் புகுவதை தடுக்கின்ற வகையில், கடைமடை நீர் ஒழுங்கிகள் 94 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

**அத்துடன் குத்தாலம் வட்டத்தில் வாணாதி ராஜபுரம் மற்றும் அரையபுரம் வாய்க்கால் பாசன உழவர்கள் பயன்பெறுகின்ற வகையில், கடலங்குடி கிராமத்தில் 2 கோடியே 40 இலட்ச ரூபாய் செலவில் புதிய படுக்கை அணை அமைக்கப்படும்.**

**மீனவ மக்களுக்காக அறிவிப்புகள்!**

**இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ மக்களின் கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்காகவும் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.**

**மயிலாடுதுறை மாவட்டம் வாணகிரி மீன் இறங்குதளம் 30 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். நாகை மாவட்டம் செருதூர் வெள்ளையாறு முகத்துவாரத்தில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரை பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படும்.**

**திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும். அடுத்து, பூம்புகார் பகுதி மீனவர்கள் பயன்பெறும் வகையில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உலர்மீன் தயாரிக்கும் குழுமம் அமைக்கப்படும்.**

**மென்பொருளுடன் ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பு திட்டத்தின்கீழ் திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் மூன்று பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு 1642 மேசை கணினிகள் மற்றும் கணினிசார் உபகரணங்கள் வழங்கப்படும்.**

> **“தமிழ்நாட்டு மக்களுக்கு நிதி உதவி செய்ய மாட்டார்களாம். ஆனால், தங்களுடைய பதவி நாற்காலியை காப்பாற்றிக் கொள்வதற்கு மட்டும் ஆதரவு கேட்டு வருகிறார்களாம். தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் இவர்களை பார்த்து நிச்சயம் ஏமாற மாட்டார்கள் என்று அழுத்தந்திருத்தமாக நான் சொல்ல விரும்புகிறேன்.”**

**அதேபோல, மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு சிறப்பான நூலகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருந்தோம். அந்த அறிவிப்பை செயல்படுத்த “பார்க் அவென்யூ” பகுதியில் நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்பான நூலகம் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

**அரசின் இந்தத் திட்டங்களுடைய பயன்கள் எல்லாம் உரிய மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்று உறுதி செய்வதற்கு, ஒரு புது திட்டத்தை வருகின்ற ஆறாம் தேதி சென்னையில் தொடங்கி வைக்கப் போகிறேன். அந்தத் திட்டத்தின் பெயர் என்ன தெரியுமா? ‘நீங்கள் நலமா?’ இந்த நீங்கள் நலமா? திட்டத்தின் மூலமாக, முதலமைச்சரான நான் உட்பட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அனைத்துத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என பொதுமக்களான உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு, கருத்துக்களை கேட்கப் போகிறோம்.**

**மக்கள் தொண்டே நம்முடைய நோக்கம்!**

உங்கள் கருத்துக்களின் அடிப்படையில், நம்முடைய அரசின் திட்டங்கள் மேலும் செம்மைப்படுத்தப்படும். முதற்கட்டமாக, நலத் திட்டங்கள் பற்றியும் அடுத்த கட்டமாக, அரசுத் துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றியும் கருத்துக்கள் பெற்று அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்படி ஒவ்வொரு நாளும், மக்கள் பயன் அடையக் கூடிய வகையில் பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கிக்கொண்டு வருகிறோம். அதுவும் எந்த சூழ்நிலையில்? நிதி நெருக்கடி அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையிலும், எந்த மக்கள்நலப் பணிகளையும், திட்டங்களையும் நாம் நிறுத்த வில்லை. ஏனென்றால், மக்கள் தொண்டு ஒன்றுதான் நம்முடைய ஆட்சியின் நோக்கம். தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தாலும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் ஒரு ‘டெல்டாகாரன்’ என்ற உணர்வுடன் இந்த விழாவில் நான் திட்டப்பணிகளை தொடங்கி வைத்திருக்கிறேன்.

நாங்க தேர்தலுக்காக – தேர்தல் நேரத்தில் மட்டும் வந்து முகத்தைக் காட்டுகிறவர்கள் நாங்கள் இல்லை. அப்படி வருகிறவர்கள் யாரென்று நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டும் என்று அவசியமில்ல. உங்களுக்கே தெரியும். இப்போது, தேர்தல் தேதி அறிவிக்கப் போகிறார்கள். அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கி இருக்கிறார் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள். வரட்டும். அதை வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. தமிழ்நாட்டுக்கு நன்மை செய்துவிட்டு, நாம் வைக்கின்ற மிக மிக நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொண்டு வரட்டும்.

**தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாற மாட்டார்கள்!**

அப்படி இல்லாமல், தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணமும், ஓட்டும் மட்டும் போதும் என்று வருகிறார்கள்! நாம் கேட்பது என்ன? சமீபத்தில், இரண்டு மிகப்பெரிய இயற்கை பேரிடர்களை எதிர்கொண்டோம்.

அப்போது ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய 37 ஆயிரம் கோடி ரூபாய் நிவாரண நிதி கேட்டோம். அதை கொடுத்துவிட்டு தமிழ்நாட்டுக்குப் பிரதமர் வந்தாரா? இல்லை! ஒரு ரூபாய் கூட, ஒரு சல்லிகாசு கூட இன்னும் கொடுக்கவில்லை!

தமிழ்நாட்டு மக்களுக்கு நிதி உதவி செய்ய மாட்டார்களாம். ஆனால், தங்களுடைய பதவி நாற்காலியை காப்பாற்றிக் கொள்வதற்கு மட்டும் ஆதரவு கேட்டு வருகிறார்களாம். தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் இவர்களை பார்த்து நிச்சயம் ஏமாற மாட்டார்கள் என்று அழுத்தந்திருத்தமாக நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு உரிமைகளுக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் நமது திராவிட மாடல் அரசின் பக்கம்தான் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் உறுதுணையாக நிற்பார்கள்! நிற்பார்கள்! நிற்பார்கள்! என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

அனைத்துவகைப் பள்ளிகளிலும் – ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு!

# நால்வகைச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 6-*

*தமிழ்நாட்டிலுள்ள அனைத்துவகைப் பள்ளிகளிலும் 2024-2025 ஆம் கல்வியாண்டில் ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு அவர்களது பள்ளியிலேயே புதியதாக வங்கிக்கணக்கு தொடங்கப்பட்டு, நால்வகைச் சான்றிதழ்கள் வழங்கப்படுமென பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*

இந்து தொடர்பான அவரது அறிக்கை வருமாறு :

முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் பொருட்டு பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுவருகின்றன. மாணவர்களின் கற்றலில் எவ்விதத் தொய்வும் ஏற்படாவண்ணம் அவர்களுக்கான உதவித்தொகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் அனைத்தும் தங்குதடையின்றி மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் “நேரடி பயனாளர் பரிவரித்தனை” (DBT) முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இப்பணியினை எளிமைப்படுத்தும் விதத்தில் வரும் கல்வியாண்டில் (2024-2025) ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும் பள்ளி மூலமாகவே வங்கிக்கணக்குகள் தொடங்கிடும் வசதி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. அத்தருணத்திலேயே ஆதார் புதுப்பித்தல் செய்யப்பட்டு ஆதார் பதிவினை வங்கிக் கணக்குடன் இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இதன்வாயிலாக பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் சிரமம் பெருமளவில் குறைக்கப்படும்.



மேலும் பள்ளியில் பயிலும் மாணவர்கள் உதவித்தொகையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போதும் பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பயில்வதற்கு விண்ணப்பிக்கும் நேர்விலும், வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்கும் தருணத்திலும் சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரியாக இருப்பின் அதற்குரிய சான்றிதழ் என நால்வகைச் சான்றிதழ்கள் அவசியமாகின்றன. இந்நால்வகைச் சான்றி தழ்களைப் பெறுவதற்கு தற்போது அரசு இசேவை மையங்கள் வாயிலாக விண்ணப்பித்து தேவையான சான்றிதழ்களைப் பெற்றுவருகின்றனர்.

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் இதற்கான சிரமத்தைக் குறைத்திடும் வகையில், மாணவர்கள் படிக்கும் அந்தந்தப் பள்ளிகளிலேயே வரும் கல்வியாண்டில் (2024-2025) ஆறாம் வகுப்பில் சேரும்போதே, தேவையான ஆவணங்களை பள்ளித்தலைமையாசிரியரிடம் சமர்ப்பிக்கும்போது அதன் விவரங்கள் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS) தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு வருவாய்த்துறையினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு (EMIS) தளத்தின் வாயிலாகவே பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு உரிய மாணவர்கள் வசம் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்த நல்வாய்ப்பினை அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

## பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் வருகிற 19-2-2024 முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 15-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## பா.ஜ.க. ஒரு ஸ்டிக்கர், அ.தி.மு.க . ஒரு ஸ்டிக்கர்

# தேர்தல் முடிந்ததும் மீண்டும் இரு ஸ்டிக்கர்களும் ஒட்டிக் கொள்ளும்!

## விளாத்திகுளம் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

தூத்துக்குடி, மார்ச் 6 –

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் கலைஞர் திடலில் மார்ச் 3 ஆம் தேதி நடைபெற்ற எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் சாதனைகள், நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளு மன்ற திமுக குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆற்றிய உரை வருமாறு: –

“நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் பிறந்தநாள், நமது மிகச் சிறப்பான நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம், நாடாளு மன்ற தேர்தலுக்கான பிரச்சார பொதுக்கூட்டம் என்று முப்பெரும் விழாவாக இந்த விழா அமைந்திருக்கிறது.

இங்கே பேசியவர்கள் எல்லாம் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதியின் சாதனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நமது திராவிடமுன்னேற்றக் கழகத்தின் மக்கள் பணிகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் முடிவற்ற பட்டியலாக நீண்டுகொண்டே போகும்.

**மக்கள் கேட்காமலேயே கொடுக்கும் கலைஞர், தளபதி!**

மக்களுக்கு என்ன தேவை என்பதை மக்கள் கேட்பதற்கு முன்பே புரிந்துகொண்டு செய்து தந்தவர் நமது தலைவர் கலைஞர். இலவச மின்சாரமாக இருக்கட்டும், விவசாய கடன் ரத்தாக இருக்கட்டும், பெண்களுக்கான சுய உதவிக் குழுவாக இருக்கட்டும் அத்தனை திட்டங்களை மக்களுக்காக உருவாக்கித் தந்தவர் கலைஞர்.

நமது தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக இப்போது அண்ணன் தளபதி அவர்கள் நடத்தி பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செய்து கொண்டிருக்கிறார். இத்தனை சாதனைகளை செய்வது மட்டுமல்ல... எத்தனை இடைஞ்சல்களை, இடையூறுகளைத் தாண்டி கொள்கைப் பிடிப்பை விட்டுவிடாமல் இவற்றை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**வெள்ளையர்களைப் போல் மோடி**

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டில் இருந்து ஜி.எஸ்.டி. வசூல் செய்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் அதன் உரிய பங்கைத் திருப்பித் தருவதில்லை. எப்படி பிரிட்டிஷ் ஆட்சியிலே இங்கே இருக்கக் கூடிய அரசர்களிடமெல்லாம் வரிவசூல் செய்து, எடுத்துக் கொண்டு போய் பிரிட்டனில் குவித்ததோ... அதேபோல ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி மாநிலங்க்ளில் குறிப்பாக பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களை எல்லாம் மிரட்டி ஜி.எஸ்.டி. வரியை வாங்கிக் குவித்துக் கொண்டு உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு வாரி வழங்கிவிட்டு. நமக்கு கிள்ளிக் கூட கொடுக்காமல் இருக்கிறார்கள்.

இங்கே அந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனை போல, இப்போதைய ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து நின்று குரல் கொடுத்து போராடக் கூடியவர் தான் நமது அண்ணன் தளபதி.

அங்கே மக்களுக்கு எதிரான, விவசாயிகளுக்கு எதிரான, தொழிலாளர்களுக்கு எதிரான, இஸ்லாமிய சகோதரர்களுக்கு சகோதரிகளுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்படும் போதெல்லாம் அதை எதிர்த்து முதல் குரல் கொடுப்பவர், கேள்விகள் கேட்பவர் நமது அண்ணன் தளபதி அவர்கள். இந்த கேள்விகளுக்கெல்லாம் பதிலாகத்தான், நமக்கு நிதி நெருக்கடியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே இருக்கக் கூடிய அமைச்சர்கள் மீதெல்லாம் வழக்குத் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த மிரட்டலுக்கும் அடிபணியமாட்டோம், நாங்கள் கலைஞரின் பிள்ளைகள் என்று தொடர்ந்து ஒன்றியத்தில் இருக்கும் மோடியின் ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த பிரச்சினை வந்தாலும், எந்த அளவுக்கு நிதியை முடக்கினாலும் நாங்கள் அஞ்சமாட்டோம்.

**மோடியால் தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் பயன் உண்டா?**

சென்னையிலும் சரி, தூத்துக்குடி, திருநெல்வேலியில் வெள்ளம் வந்தது. விவசாயிகள், மீனவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் இதனால் பாதிக்கப்பட்டார்கள், வீடுகள் இடிந்து விழுந்தன. வெள்ள பாதிப்பை பார்வையிட சென்னைக்கு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வந்தார். தூத்துக்குடிக்கு நிதி யமைச்சர் நிர்மலா சீதாராமன் வந்தார். வந்து எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு, கோயிலை சுற்றி ஏன் சகதியா இருக்கு? அங்கே பூஜை செய்கிறவருக்கு ஏன் சம்பளம் குறைவாக இருக்கு? என்று கேள்வி கேட்டார். இதுதான் அவருக்கு இருக்கும் அக்கறை.

மணிப்பூரில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்கள் பற்றி கேள்வி கேட்டால், ஒரே இனத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்ணுக்கு நடந்தது பற்றி கேள்வி கேட்கிறாரே.. அதேபோல மக்களுடைய துயரங்களை, வலிகளை மக்கள் பாடுகளை பார்த்து விட்டு கோயிலைச் சுற்றி நிற்கும் சகதி பற்றி கேட்கிறார். உங்கள் அக்கறை பற்றி எங்களுக்கு கவலை இல்லை.

இவ்வளவு அமைச்சர்கள் வந்தீர்களே... பிரதமர் தமிழ்நாட்டுக்கு வந்து செல்வதில்லை... தமிழ்நாட்டிலேயேதான் இருக்கிறார். நேற்று தமிழ்நாடு, நாளை தமிழ்நாடு முந்தா நேற்று தமிழ்நாடு, அடுத்த வாரம் தமிழ்நாடு, போன வாரம் தமிழ்நாடு... எத்தனை முறை வந்தால் என்ன? நீங்கள் இங்கேயே இருந்தால் கூட உங்களுக்கு வாக்கு விழப் போவதில்லை. உங்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

பிரதமர் தொடர்ந்து வந்து வந்து செல்கிறாரே தவிர, பிரதமர் இதுவரை வெள்ள நிவாரணம் என்று ஒரு ரூபாய் கொடுத்திருக்கிறாரா? ஜி.எஸ்.டி.யை வாங்கிக் கொண்டு போய் உத்திரப்பிரதேசத்துக்கு டபுள் மடங்கு. ஆனால் தமிழ்நாட்டில் இருந்து ஒரு ரூபாய் வாங்கினால் 29 பைசாதான் திரும்பக் கொடுத்திருக்கிறார்.

பிரதமர் அரசு விழாவில், ‘யுபிஏ காங்கிரஸ் கூட்டணி அரசில் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. நாங்கள்தான் நிறைவேற்றினோம்’ என்று சொல்கிறார். தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தை யுபிஏ அரசில் நிதியமைச்சராக திரு. சிதம்பரம் இருந்தபோது 23 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின் அடுத்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மோடி பிரதமர் ஆனார். முதல் நிதி நிலை அறிக்கையிலேயெ அருண் ஜேட்லி, தூத்துக்குடி துறைமுகத்துக்கு 11 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். ஆனால் சொன்னதோடு சரி... பத்து வருடம் ஆகிவிட்டது. இப்போது தேர்தல் வருகிறது. தூத்துக்குடி மக்களை யும் தமிழக மக்களையும் ஏமாற்றவேண்டும் என்பதற்காக... 10 வருடம் முன்பு காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி அரசில் 23 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய திட்டத் துக்கு இப்போது வெறும் ஏழாயிரம் கோடி நிதி ஒதுக்கி அடிக்கல் நாட்டியிருக்கிறார் பிரதமர். இதுதான் அவர்கள் மக்கள் முன் தொடர்ந்து வைக்கக் கூடிய பொய் பிரச்சாரம், போலி பிரச்சாரம். கேஸ் சிலிண்டருக்கு மானியம் கொடுக்கிறேன் என்றார்கள். ஆனால் இன்று சிலிண்டர் ஆயிரம் ரூபாயைத் தாண்டிவிட்டது. பெட்ரோல், டீசல் விலையை பற்றி சொல்லவே வேண்டியதில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒவ்வொருவர் அக்கவுண்டிலும் 15 லட்சம் போடுகிறேன் என்று சொன்னார். ஆனால், இன்றுவரை நிறைவேற்றவில்லை.

ஆனால் நமது அண்ணன் தளபதி அவர்கள், சொன்னதைச் செய்து கொண்டிருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி தருவேன் என்று சொன்னார்கள். பலர் இது சாத்தியமா? என்று கேட்டார்கள். அதை செய்துகாட்டியவர் கலைஞர் அவர்கள்.

அதேபோல நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் தருவேன் என்று சொன்னபோது பலரும் இது சாத்தியமா, முடியாது என்றார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் இப்போது மகளிர்க்கு உரிமைத் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை வழங்கி, சொன்னதை செய்து காட்டியிருக்கிறார் முதலமைச்சர் அண்ணன் தளபதி.

**அ.தி.மு.க. – பா.ஜ.க. இரண்டு ஸ்டிக்கர்கள்**

மேலும் கலைஞரின் கனவு இல்லம் என்ற திட்டத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் வீடு கட்டுவோம் என்று அறிவித்து ஒரு வீட்டுக்கு தலா 3லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருப்பவர் முதலமைச்சர் தளபதி. வீடு கட்டும் திட்டத்து க்கு கால் வாசி நிதியைதான் ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. முக்கால் வாசி நிதியை தமிழ்நாடு அரசுதான் ஒதுக்குகிறது. ஆனால் ஒன்றிய அரசு இதை பிரதமர் வீடு கட்டும் திட்டம் என்று ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்கிறது. ஏற்கனவே அதிமுக ஆட்சி ஸ்டிக்கர் ஒட்டியது. இப்போது பா.ஜ.க. ஆட்சி ஸ்டிக்கர் ஒட்டுகிறது. தேர்தல் முடிந்ததும் இந்த இரு ஸ்டிக்கர்களும் மீண்டும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் விரோதிகள், தமிழ்நாட்டின் விரோதிகள், தமிழ்நாட்டு உணர்வுகளை கொச்சைப்படுத்தும் ஆளுநரை நம் மீது திணித்திருக்கும் பா.ஜ.க. ஆட்சி. அந்த ஆட்சிக்கு இந்த தேர்தலில் சரியான பாடத்தை நாம் கற்றுத் தரவேண்டும். நாடும் நமதே நாற்பது நமதே என்று வெற்றியை முதலமைச்சர் அண்ணன் தளபதிக்கு பிறந்த நாள் பரிசாக அளிக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்வில் அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, ஜெயங்கொண்டம் நகரில், அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை விளக்க பொதுக்கூட்டத்தில், கழக ஊடக பிரிவு மாநில இணைச்செயலாளர் கவிஞர் திருமதி. சல்மா, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில் மாநில துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வ.கதிர்வேல், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, சோலார் வெண்டிபாளையம் பிரிவு அருகில் உள்ள இளைஞர் அணி கொடிக்கம்பத்தில் கழகக் கொடியேற்றி வைத்து அட்சயம் அறக்கட்டளை மறுவாழ்வு இல்லத்தில் காலை உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் எஸ்.எல்.ப.சச்சிதானந்தம், ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி ப.க.பழனிசாமி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ரகுராம், ராகவேந்திரன், பாலசுப்பிரமணியம், சதீஷ்குமார், விஜயராஜன், நித்தின், ஜாகீர் உசேன், சீனிவாசன், ரமேஷ், பார்த்திபன், சசிக்குமார், அன்பரசன், நவீன் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### எல்லோருக்கும் எல்லாம் இளைஞர் எழுச்சி நாள்

# நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்!

## திருவாரூரில் கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

திருவாரூர், மார்ச் 6-

திருவாரூரில் நடைபெற்ற எல்லோருக்கும் எல்லாம் திராவிட நாயகர் ஆட்சியின் சிறப்பு, தமிழ்நாடு முதல்வர் தளபதியரின் பிறந்த இளைஞர் எழுச்சி நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன்சிறப்புரை யாற்றினார். ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி நடைபெற்ற இந்த கூட்டத்தில் பங்கேற்றமாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழினையும், இந்தியாவே வியந்து போற்றும் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு தனது வாழ்நாளை செலவிட்டு வரும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் தலைமையிலான ஆட்சியின் மேன்மைகளையும், திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் குறிப்பாக பெண்கள் குடும்பத்தலைவிகள் அடைந்திருக்கும் நன்மைகள் பற்றியும், ஒன்றிய அரசு போதுமான நிதியினை தமிழ்நாட்டிற்கு தராத போதும் தனது திறன்மிக்க நிர்வாகத்தால் நல்லாட்சி தந்து மக்களை பாதுகாக்கும் தளபதியாரின் ஆட்சித் திறத்தையும், பாசிச சக்திகள் நாட்டை துண்டாட நினைக்கும் போக்கினையும் தனக்கே உரிய செந்தமிழ்சொற்களால் சிறப்புடன் எடுத்துரைத்தார்.

பெருந்திரளாக கூடியிருந்த குறிப்பாக பெண்கள் அதிக அளவில் பங்கேற்ற இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை வகிக்க, நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் வரவேற்புரையும்,ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா நன்றியுரையும் ஆற்றினர்.

ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலிய பெருமாள், ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி கே.கலைவேந்தன், பொதுக் குழு உறுப்பி னர்கள் டி. செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.என்.அசோகன், ராமகிருஷ்ணன், நகர பொருளாளர் ஆர்.ரஜினி சின்னா, துணை செயலாளர்கள் பக்கிரிசாமி, மணி மாறன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.




அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை விளக்கப் பொதுக்கூட்டம், நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் சா.சி.சிவசங்கர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கடலூர் இள.புகழேந்தி, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கவிஞர் வீரமுரசு, சண்கோ.சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., தொகுதி மேற்பார்வையாளர் வண்ணை அரங்கநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, பொருளாளர் சாஸ்தா நடராஜன், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், கூகூர் சி.அம்பிகாபதி, எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நெறிஞ்சிக்குடி ஊராட்சி, பாலப்பட்டி கோவில் அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டிடத்தினை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (04.03.2024) திறந்து வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை பெரியகடைத்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி எதிரில் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல், முதல்வர் மு.க.ஸ்டாலின் 71வது பிறந்தநாள், கழக அரசின் 3ஆம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் எஸ்.ஆர்.என்.செந்தில்குமார் தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை, தணிக்கைக் குழு உறுப்பினர் ப.பாலசுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், நகர் மன்ற தலைவர் எஸ்.சண்முகப் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில மாணவரணி துணைச் செயலாளர் கா.அமுதரசன், தலைமைக் கழகப் பேச்சாளர் ந.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆதி. ராஜேஷ் உள்பட பலர் பேசினர். மாவட்டப் பிரதிநிதி சு.தனபால் வரவேற்றார். நகரப் பொருளாளர் எஸ். வெங்கடேசன் நன்றி கூறினார்.

## தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. வீழ்வதும், திட்டங்களின் நாயகர்

# நம் முதல்வர் தலைமையில் 'இந்தியா' கூட்டணி வெல்வதும் உறுதி!

## காஞ்சிபுரத்தில் நடைபெற்ற 'எல்லோருக்கும் எல்லாம்' பட்ஜெட் விளக்க பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

**காஞ்சிபுரம், மார்ச் 6 -**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் (03-02-2024) அன்று காஞ்சிபுரத்தில் “திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் - எல்லோருக்கும் எல்லாம்” எனும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

காஞ்சிபுரத்திற்கு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா கவியரங்கத்திற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக விருந்தபோதும், பிறகு முதலமைச்சர் அவர்களோடு, சி.வி.எம்.பி.எழிலரசன் அவர்களுடைய தாத்தா அண்ணாமலை அவர்களின் 80வது பிறந்தநாள் விழாவிற்கும் வருகை தந்திருக்கிறேன். 2007 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இளைஞர் அணி முதல் மாநில மாநாட்டை தளபதி அவர்கள் நடத்தி, அதில் 25 தீர்மானங்கள் நிறைவேற்றினார்.

அதில் இரண்டு தீர்மானங்களில், முதலாவது தமிழ்நாடு முழுவதும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கு பரிசு. மற்றொன்று பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி வெற்றிப்பெறுபவர்களுக்குப் பரிசு என்ற இரண்டு தீர்மானங்களாகும். அப்போட்டிகள் காஞ்சிபுரத்தில் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெற்றபோது, அதிலும் இளைஞரணி துணைச் செயலாளராகவிருந்து அந்த நிகழ்ச்சியை நடத்திடும் பொறுப்பை ஏற்று செயல்பட்டதும், அதேபோல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் சென்னை சைதாப்பேட்டை ஐந்து விளக்கில் தொடங்கி, ஆலந்தூர் வழியாக கடைசியாக காஞ்சிபுரத்தில் உரையாற்றினார். அப்போது அந்த நிகழ்ச்சியில் அவரைத் தொடந்து சென்று நானும் ஒருவனாக தரையில் அமர்ந்து அவரது பேச்சைக் கேட்டது என் வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன்.

எனது அரசியல் வழிகாட்டியாக நான் மதிக்கிற, நினைக்கிற, 1989ஆம்ஆண்டு சைதைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.ஸ்ரீதர் அவர்களின் இல்லத்திருமணம், மகன் மற்றும் மகள் திருமணம் ஒரே நேரத்தில் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நேரத்தில் அதையும் பொறுப்பேற்று அதிலும் கலந்துகொண்டேன். இப்படி காஞ்சிபுரத்தில் தொடர்ந்து பங்கேற்கேற்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தாலும், இன்றைக்கு இந்த இயக்கத்தை உருவாக்கிய பெருமகனார் பேரறிஞர் அண்ணா, காஞ்சியிலே உதித்த அந்த பூமியில், இன்றைய நிகழ்வில் பங்கேற்று பேசுகிற வாய்ப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பது என் வாழ்நாளில் கிடைத்திருக்கிற அரும்பெரும் பேறுகளில் ஒன்று என்பதை மகிழ்ச்சியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு செய்தியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தருமபுரத்தின் 27வது ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார். இவர் தந்த செங்கோலைத்தான் பிரதமர் நரேந்திரமோடி பாராளுமன்றத்தில் கொண்டு போய் வைத்தார். அவருக்கு அவ்வளவு பெரிய மதிப்பெல்லாம் கொடுத்தார்கள். அவர் ஜதி பல்லக்கில் சுற்றி வரும்போது ஒரு சிறிய பிரச்சினை ஆகியது. அப்போது அரசுக்கு எதிரான விமர்சனங்களை அள்ளித்தெளித்தவர்களில் அவரும் ஒரு மடாதிபதி. நேற்றைக்கும், நேற்றைக்கு முந்தினம் அவரது அறிக்கைகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். ஆன்மிகவாதிகளை எந்தளவுக்கு மதிக்கிறார், மடாதிபதிகளுக்கு உறுதுணையாக இருக்கிறார் என்பதை மிகச்சிறப்பாக கடந்த இரண்டு நாட்களாக சொல்லிக்கொண்டிருக்கிறார்.

### மடாதிபதிக்குப் பாதுகாப்பு!

அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவரும், பாஜக மாவட்ட தலைவர்களில் ஒருவருமான, “ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமச்சாரியின் பாலியல் வீடியோ எங்கள் கையில் இருக்கு, அதற்காக ரூ.30 கோடி எங்களுக்கு தரணும்” என்று சொல்லி அவரை மிரட்டுகிறார்கள். இந்த செய்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிந்தவுடன், இந்த மிரட்டல்காரர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து, அந்த மடாதிபதிக்கு ஓர் மிகப்பெரிய பாதுகாப்பை ஏற்படுத்தி இருக்கிற அரசு இந்த அரசு. ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற வகையில் எல்லா வகையிலும் நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

ஆட்சிப்பொறுப்பேற்று கடந்த 33 மாதங்களில் இதுவரை 1,461 குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பு ஜெயலலிதா, ஓ.பி.எஸ்., எடப்பாடிப் பழனிச்சாமி ஆகியோர் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள் அப்போதும், கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட்டுக்கொள்ளுங்கள். “ஆன்மிகவாதிகளுக்கு எதிரானது தி.மு.க., நாத்திகர்களின் கூடாரம் தி.மு.க., இவர்கள் நம்மைக் காக்க மாட்டார்கள் என்று சொல்லுகின்ற யோக்கிய சிகாமணிகள்” இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்?

இந்த யோக்கிய சிகாமணிகள் தாம் ஆக்கிரமித்து வைத்திருந்த 6,442 ஏக்கர் நிலம், ரூ.5,725 கோடி மதிப்புள்ள கோயிலுக்குச் சொந்தமான இடம். இவற்றை மீட்டுத் தந்தது தி.மு.க. அரசு. மீட்டுத்தந்த தலைவர் முதலமைச்சர் அவர்கள். ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள பி.கே.சேகர்பாபு அவர்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு அமைச்சராக்கி இந்த மகத்தான சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரை ஆட்சியில் இருந்தவர்கள் யாரும் செய்யாத வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த தொன்மையான கோயில்கள் 197 கோயில்கள் இருக்கிறது. அவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு அரசு நிதி 200 கோடியும், அறநிலையத் துறை சார்பில் 104 கோடியும் ஆகமொத்தம் ரூபாய் 304 கோடியே 85 லட்சம் செலவில், அந்த 197 ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த கோயில்களையும் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு வருகிறது. இது எந்த ஆட்சியிலும் நடக்காத ஒன்று. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்துவிட்டால், அதை அப்படியே விட்டுவிடுவார்கள். ஆனால் அதை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாட்டார்கள். ஆனால் இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இந்தத் துறையின் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் அவ்வப்போது 100 திருமணங்களை நடத்தி வைப்பார். திருக்கோயில்களின் சார்பில் ஒரு ஜோடி திருமணத்திற்கு ரூ.50 ஆயிரம் செலவு. ‘ஒரு கல்யாணத்தை செய்வதற்கு ஆயிரம் செருப்புகள் தேயணும்’ என்று சொல்வர்கள். ஆனால் இதுவரை, 1100 கல்யாணத்தை செய்து வைத்திருக்கிறார்கள்.

17 ஆயிரம் கோயில்கள் ஒரு கால பூஜை என்கிற அளவில் இருக்கின்றன. இங்கு பணியாற்றுகிற அர்ச்சகர்களுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம். 92 ஆயிரம் பேர் இந்த அன்னதானத் திட்டத்தில் பயனடைகிறார்கள் என்பது மகிழ்ச்சியான செய்தி.

உலகத்தில் 200 நாடுகள் இருக்கின்றனது. இந்த எல்லா நாடுகளிலும் மருத்துவம் பார்க்கப்படுகிறது. ஆனால் உலகத்திலேயே வீடுகளுக்கே சென்று மருத்துவம் பார்ப்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் சாமணப்பள்ளியில் மகத்தானத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து முதல் நோயாளிக்கு மருந்துப்பெட்டகத்தை வழங்கினார். அதேபோல் 50 லட்சமாவது பயனாளிக்கும் சித்தலப்பாக்கத்தில் வழங்கினார். 60 லட்சமாவது பயனாளிக்கு மதுரை மாவட்டம் மையிட்டான் பட்டிக்குச் சென்று நான் வழங்கினேன். திருச்சி சன்னாசிப்பட்டியில் 1வது கோடியோ 1 பயனாளிக்கு முதலமைச்சர் அவர்கள் மருந்துப் பெட்டகத்தை வழங்கினார். ஒரு கோடி பேருக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைத் தாண்டி ஒரு கோடியே 1வது பயனாளிக்கும் வழங்கினார். இதுவரை 1கோடியே 70 ஆயிரம் பேருக்கு மருந்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.



அதேபோல் இந்த மாவட்டத்தில் ‘இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48’ திட்டத்தை மேல்மருவத்தூரில் 2021ஆம் ஆண்டு டிச.18 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் அதிக விபத்துகள் நடக்கிற இடங்கள் என்று 500 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 500 இடங்களில் இருக்கிற அரசு மற்றும் தனியார்

642 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முதல் 48 மணிநேரம் கோல்டன் டைம் என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு லட்சம் ரூபாய் வரை அரசாங்கம் செலவு செய்கிறது.

### நிர்மலா சீதாராமனின் பொய்ச் செய்தி!

இன்றையக் கூட்டத்திற்கு நிறைய பெண்கள் வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள் இருக்கின்றன. இதில் 11 மேயர்கள் பெண்களாவார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 51 கவுன்சிலர்கள், இதில் 30 பேர் பெண்கள் மாமன்ற உறுப்பினர்கள். ஆண்களுக்கு சரிபாதியாய் இருக்கிறீர்கள். நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டாமல் இருப்பது குறித்து கேள்வி கேட்டார்கள். இந்தியாவின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் எழுந்து சொல்கிறார், இந்த மருத்துவமனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தமிழ்நாடு தாமதம் காட்டுகிறது. அதனால் மருத்துவமனையை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது” என்று நாடாளுமன்றத்தில் பொய் செய்தியை பதிய வைத்தார்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்டுவதற்கு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி அமைச்சரவைக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, ஒன்றிய அரசின் பிரதமர் மோடியை அழைத்து 2019ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்டுவதற்கு ஒரு செங்கல்லைக் கொண்டு அடிக்கல் நாட்டுகிறார். டெல்லியிலிருந்து அதிகாரிகள் மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் துறைக்கு ஒரு தாக்கீது அனுப்பி வைத்தனர். 202.47 ஏக்கர். சற்றொப்ப 203 ஏக்கர் நிலத்தை நிலஆர்ஜிதம் செய்து சான்றுகளை அனுப்புகள் என்று சொல்கிறார்கள். 2020ஆம் ஆண்டு நவம்பர் 3அன்று எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு டெல்லிக்கு நிலஆர்ஜிதம் செய்து சான்றுகளை அனுப்பி வைத்தனர். 2024ஆம் ஆண்டு சொல்கிறார்கள். நிலஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்று.

நிலஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றால் ஒரு பிரதமர் வந்து யாருக்கோ சொந்தமில்லாத இடத்தில் வந்து எப்படி அடிக்கல் நாட்ட முடியும்? ஒரு பிரதமர் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் என்றால் ஆயிரம் விசாரணைகள் இடம்பெறும். அனைத்தையும் முன்கூட்டியே பரிசோதனை செய்வார்கள். நிலஆர்ஜிதம் செய்யப்படவில்லை எனில் ஒரு பிரதமர் எப்படி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும்? ஒரு முதலமைச்சர் எப்படி பிரதமரை அந்நிகழ்வில் பங்கேற்க அழைக்க முடியும்? இதை நாங்கள் கேட்கிறோம். இதற்கு நிர்மலா சீதாராமனும் பதில் சொல்லவில்லை. பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜனைக் கேள்வி கேட்டவரும் இன்னமும் பதில் சொல்லவில்லை.

### கிண்டி பன்நோக்கு மருத்துவமனை!

தமிழ்நாட்டில் 813 துணை சுகாதார நிலையங்கள் இருக்கிறது. 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிறது. 1300 மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு பன்னோக்கு அரசு மருத்துவமனை ஓமந்தூரார் மருத்துவமனை இருக்கிறது. இன்னொரு மருத்துவமனைக் கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பதினெட்டே மாதங்களில் சென்னை கிண்டியில் கட்டி முடிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜூன் 15அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

நாடாளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் சொன்னார். மற்ற மாநிலங்களில் 750 படுக்கைகளுடன் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படுகிறது. ஆனால் மதுரையில் 950 படுக்கை வசதிகளுடன் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படுகிறது என்று. அவர் சொல்லி 5 ஆண்டுகள் ஆகிறது ஒரு செங்கல்லோடு நிற்கிறது. ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் படுக்கை வசதிகளுடன் ரூ.430 கோடி ரூபாய் செலவில் ஒரு பன்னோக்கு மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகள் இந்தியாவில் உள்ள வேறெந்த எய்ம்ஸ் மருத்துவமனைகளிலும் இல்லை. டபுள் பலூன் எண்டோஸ் கோப்பி, ஆட்டோ எம்.ஆர்.ஐ., ஹைய் என்ட் கேத்தோலாக், 76 கட்டணப் படுக்கை அறைகள் போன்ற மருத்துவ வசதிகள் வேறெந்த மருத்துவமனைகளிலும் இல்லை. இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அதே வளாகத்தில் இந்தியாவில் முதலாவதாக வயது மூத்தோருக்கான பிரத்யேக மருத்துவமனையும் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

### அண்ணா நூற்றாண்டு நூலகம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைக் கட்டினார்கள். அதேபோல் இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மதுரையில் தென்னகத் தமிழ்நாட்டு மக்கள் பயனடையும் வகையில் ரூ.216 கோடி செலவில் சற்றொப்ப 4 லட்சம் புத்தகங்களுடன் மிகப்பெரிய நூலகத்தைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அதுபோல் உலகத்திலேயே வேறெங்கும் இல்லாத ஏறுதழுவுதல் அரங்கத்தை, ஒரு முன்மாதிரியான அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்துத்தந்திருக்கிறார்கள்.

எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்டாமலேயே இல்லாத மருத்துவமனைக்கு ஆண்டிற்கு 50 மருத்துவர்களை அனுப்பி வைக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும், வடநாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், தென்னாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது கிழக்கிந்தியாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கருதுபவர். அந்த மாணவர்கள் இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 150 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்.எம்.சி. என்று சொல்கிற நேஷ்னல் மெடிக்கல் மிஷன் அதிகாரிகள் சென்னை, திருச்சி, தருமபுரியில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஆய்வுக்கு வந்தவர்கள். மிகவும் பழமை வாய்ந்த 1740ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அனுமதியை ஏன் ரத்து செய்யக்கூடாது? என்று சொன்னார்கள். என்ன காரணம் என்று கேட்டபோது ஒரு இடத்தில் சி.சி.டி.வி. கேமரா வேறப் பக்கம் திரும்பிக்கொண்டிருந்தது என்று சொன்னார்கள். இதுபோன்ற சொற்பக் காரணங்களால் திருச்சி, தருமபுரி போன்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை ஏன் ரத்து செய்யக்கூடாது? என்று கேட்டார்கள். அந்த சிறிய காரணங்களையெல்லாம் ஒரு மணி நேரத்தில் சரிசெய்து, திருப்பி ஒரு கடிதம் அளித்தோம்.

பொதுமக்கள் கேட்கும் கேள்வி என்னவென்றால், ஒரு கேமரா திரும்பி இருந்ததற்கே மருத்துவமனைகளின் அங்கீகாரத்தை ரத்துசெய்யும் நீங்கள். மருத்துவமனை கட்டாமலேயே ஆண்டிற்கு 50 மாணவர்களை மருத்துவம் படிக்க தமிழ்நாட்டிற்கு அனுப்புகிறீர்களே? உங்களை என்.எம்.சி. அங்கீகாரத்தையார் ரத்து செய்வது? என்று கேட்கிறார்கள்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பெருவெள்ளம். 47 ஆண்டுகளுக்குப் பிறகு 2023 ஆம் ஆண்டு டிச.5, 6 ஆகிய இரண்டு நாட்கள் பெய்த மழை, இதற்கு முன்பு, 147 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த மழையின் அளவுக்குச் சமம். பட்டினப்பாக்கம் 50 சென்டிமீட்டர். நுங்கம்பாக்கத்தில் 53 சென்டிமீட்டர் கொட்டித் தீர்த்துள்ளது. என 20 சென்டிமீட்டர் மழை பெய்தாலே தாங்காது. 24 மணிநேரத்தில் 53 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டது.

### வெள்ளப் பாதிப்பு நிவாரண நிதி!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வெள்ளப் பாதிப்பிற்கு ரூ.19,692 கோடி நிவாரணம் வேண்டுமென்று ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதினார். ஒன்றிய அரசின் நிர்வாகிகள் வந்து ஆய்வுசெய்துவிட்டு சென்றுவிட்டார்கள். இன்னும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அதேபோல் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி நான்கு மாவட்டங்களிலும் பெரிய அளவிலான வெள்ளபாதிப்பு, அதே மாதத்தில், அங்கேயும் மிகப்பெரிய அளவிலான பாதிப்பு. ஏரல் என்கிற ஊரே இல்லாமல் போய்விட்டது அந்த மழை பாதிப்பில். அந்த வெள்ள பாதிப்புக்கு நிவாரணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18,214 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். இதுவரை ரூ.37,906 கோடி ரூபாய் நிவாரணம் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் இதுவரை டெல்லி மோடி அரசு ஒரு ரூபாய்கூட தரவில்லை.

ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ரூபாய் ஆயிரம் நிவாரணம் வழங்கினார்கள். அதேபோல் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் மிதமான பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் வீட்டிற்கு ரூ.1000 வழகினார்கள். விடுபட்டவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்து, விடுபட்டவர்களுக்கு மணிஆர்டர் மூலம் கடந்த மார்ச் 1 அன்று ரூ.1000 வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு நிதி வழங்காமலேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் துயர் துடைத்துள்ளார்கள்.

### ஒன்றிய அரசு செய்ய மறந்த திட்டங்கள்!

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அவர்கள் மாநில அரசின் திட்டங்களையெல்லாம் சாதனைகளையெல்லாம் இங்கே எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒன்றிய அரசு செய்ய மறந்தத் திட்டங்கள். அந்த மறந்த திட்டங்கள் எல்லாம் இங்கே வரவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் நீங்கள்? வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் யாரை அறிவிக்கிறாரோ, அவர்களை வெற்றிப் பெற செய்ய வேண்டும். அதுவும் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.

2019ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் திருப்பெரும்புதூரிலும், திண்டுக்கல்லிலும் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றோம். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் சென்னை வடக்கு, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்குத் தொகுதிகளைப் பெற்றிருந்தோம். 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 8 தொகுதிகள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 9 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 11 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் கீழான வாக்குகள் வித்தியாசம் 5 தொகுதிகள், இப்படி 39 தொகுதிகளிலும், ஒரு தொகுதியைத் தவிர மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த மாதிரியான வெற்றி இதற்கு முன்னால் எப்போதும் நாம் பெற்றதில்லை. இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி.

இப்போது மக்களிடையே ஏற்பட்டிருக்கிற எழுச்சி. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எல்லாத் தொகுதியில் 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி என்னும் கின்னஸ் சாதனை படைக்க இருக்கிறது தமிழ்நாடு. இதன்மூலம் எந்தக் காட்சியாக இருந்தாலும் கட்டும் தொகையை (டெபாசிட்) இழக்கும் நிலைமை வர இருக்கிற தேர்தல்களில் நடக்க இருக்கிறது. எல்லோரையும் டெபாசிட் இழக்க வைக்கிற திட்டங்களைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்த இருக்கிறார்.

ரூ.13,720 கோடி செலவில் 1,15,16,292 மகளிர் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் பெறும் மகத்தான மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் சாதனைப் படைத்திருக்கிறது. வேறெந்த நாட்டிலும் இல்லாத திட்டம். இது தான் திராவிட மாடல். பட்ஜெட் அறிவிப்பிற்கு முன்னர் நகரப் பேருந்துகளில் மட்டும் 445 கோடி இலவச பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு 50 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் அறிவிப்பதற்கு முன்பு வரைப் பொதுப்போக்குவரத்து பயன்படுத்துவோரின் சதவிகிதம் 40 ஆக இருந்தது. மகளிருக்கு விடியல் பயணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு பொதுபோக்குவரத்து பயணம் மேற்கொள்வோர் 65 சதவிகிதமாக உயர்ந்துள்ளது மகிழ்ச்சியளிக்கக்கூடியது என்று ஏற்கெனவே இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.2050 கோடியிலிருந்து இப்போது ரூ.3050 கோடியாக உயர்த்தப்பட்டு, ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைவாழ் பகுதியில் வசிக்கும் மகளிர் இலவசப் பயணம் மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார். இதுதான் எல்லோருக்கும் எல்லாம்.

### தமிழ்ப் புதல்வன் திட்டம்!

புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, பி.ஏ., பி.காம்., இளங்கலைப் படிக்கும் அரசு மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை அது 3 ஆண்டுகளில் ரூ.36 ஆயிரமும், பி.இ., பி.டெக்.,பொறியியல் பயிலும் மாணவிகளுக்கு 4 ஆண்டுகளில் 48 ஆயிரமும், எம்.பி.பி.எஸ்., மருத்துவம் படிக்கும் மாணவிகளுக்கு 5 ஆண்டுகளில்60 ஆயிரமும், டிப்ளமோ தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு 24 ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,81,075 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இப்போது அரசு உதவிப்பெறும் பள்ளிகளில், கிறிஸ்த்துவ, மற்றும் இசுலாமியப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1000 வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறாரே, இதுதான் எல்லோருக்கும் எல்லாம். இதுவரை மாணவிகள் தான் மாதந்தோறும் உதவித் தொகைப் பெற்று வந்தார்கள். இப்போது மாணவர்களுக்கும் ‘தமிழ்ப்புதல்வன் திட்டம்’ தொடங்கப்பட்டு, மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட இருக்கிறது. இதுதான் ‘எல்லோருக்கும் எல்லாம்’.

இப்போது ஒரு திட்டம். காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்திற்கு ஒரே உரிமையாளர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் மட்டும்தான். இத்திட்டம் தொடங்கும் போது தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் அவர்கள் 16 லட்சம் மாணவர்கள் பயனடைகிற வகையில், 31,008 தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.404 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார். தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நிதிநிலை அறிவிப்பிற்குப் பிறகு அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் கிறிஸ்த்துவ, மற்றும் இசுலாமியப் பயிலும் மாணவர்களுக்கும் காலை உணவுத் திட்டத்திற்காகரூ.600 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார் அல்லவா? இதுதான் ‘எல்லோருக்கும் எல்லாம்’. ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற வகையில் தமிழ்நாட்டில் அனைத்துத்தரப்பு மக்களும், சிறுவர் முதல் குடுகுடு கிளவர் வரை பயனடைகிற இந்த அரசினை நடத்துகிற பிறந்தநாள் விழா நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.



மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூத்தூர் ஊராட்சியில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரத்தை மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் துவங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், முத்தூர் அங்கன்வாடி மையத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.சந்திரசேகர், பேரூர் கழகச் செயலாளர் சென்பகம் பாலு, வட்டார மருத்துவ அலுவலர் டி.ராஜலக்ஷ்மி, முத்தூர் மருத்துவ அலுவலர் பிரசாந்த் தாமரைக் கண்ணன், பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள், துணைத் தலைவர் மு.க.அப்பு, நல்லூர் அப்பு உள்பட பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசு நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நாகை புத்தூர் சி.எஸ்.ஐ.திடலில் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலுந்து கொண்டு பேசினார். உடன் சட்டத்துறை அமைச்சரும், நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான எஸ்.ரகுபதி நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் ஜெயபிரகாஷ், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை! அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலை!

# நாகையில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

நாகை. மார்ச் 6-

நாகை மாவட்டம் தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில், நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கி பேசினார். நாகை நகரக் கழகச் செயலாளரும், இரா.மாரிமுத்து வரவேற்புரையாற்றினார்.. அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலை வகித்து பேசினார். கூட்டத்தில் பொதுப்பணித்துறை, அமைச்சர் எ.வ.வேலு கலுந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், எஸ்.கே.வேதரெத்தினம், ப.செல்வம், க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேக நாதன், க.மறைமலை, மு.லோக நாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், செல்வ. செங்குட்டுவன், ஆர். டி.எஸ்.சரவணன், மகா. குமார், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சிக்கன் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், பொதுக் குழு உறுப்பினர் எஸ்.பி.டி. சார்லஸ், கே.பாண்டியன், கோ.சிவக்குமார், எல். எஸ்.ஈ.பழனி யப்பன், எஸ். பன்னீர்செல்வம், இல.பழனியப்பன், உமாசெந்தாமரைச்செல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் கா. அட்சயலிங்கம், சி.சுப்பரமணியன், மரியசார்லஸ், முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்தி, ப. உதயக்குமார், கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், த.தமயந்தி, ஆர்.துரைராஜ், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.வி.டி.அருள், ஆர்.ஆர். குலோத்துங்கன், ஆர்.சுரேந்தர், எஸ்.புவனேஸ்வரி, மு.தினஷ்குமார், கே.எஸ். சாகுல்ஹமீது, இனம்சுந்தர், வி.கமல், முகுந்தன், எஸ். கே.ஜி.ஏ. சேகர், எஸ்.பால்ராஜ், க.சத்தியமூர்த்தி, எஸ்.சந்தோஷ், எஸ்.வெற்றிச்செல்வன், மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் ஆர்.அஜிதா, ஒன்றியக் குழு தலைவர்கள் வே.அனுசியா, ஆர்.ஜி.தமிழரசி, செல்வராணிஞானசேகரன், என்.வாசுகி பேரூராட்சி தலைவர்கள் ஏ.எல். டயானாசர்மிளா, இந்திரா காந்திசேகர், நாகை நகர கழக நிர்வாகிள் ஆர். ரமணி, பி.திலகர், அபுபக்கர், கே.சித்திரா மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகி கள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர்

# மு.க.ஸ்டாலின் பிறந்த நாளில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்!

நாமக்கல், மார்ச் 6-

கழகத் தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த மார்ச் 1 ஆம் தேதி பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணி விக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய 3 தொகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதற்கட்டமாக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம், நகரக் கழக செயலாளர்கள் ராணா ஆனந்த், செ.பூபதி, அ.சிவகுமார், ஒன்றிய கழக செயலாளர் வி.கே.பழனிவேல், நகர மன்ற தலைவர் து.கலாநிதி, மாநில நிர்வாகிகள் நாமக்கல் ப.ராணி, இரா. நக்கீரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், படியூர் ஊராட்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அநீதிகளை, கழக அரசின் சாதனைகளை பறைசாற்றிட இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் தமிழக பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் வழங்கிடும் திண்ணை பிரச்சாரத்தை மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் துவக்கி வைத்தார். இதில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், BLA2 வாக்குச்சாவடி குழு ஒருங்கிணைப்பாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆத்துரில் கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாள் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர். கழக வழக்கறிஞர். சூர்யா வெற்றி கொண்டான் கலந்து கொண்டு பேசினார். மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர். எஸ்.ஆர்.சிவலிங்கம். அவைத்தலைவர். மு.ரா.கருணாநிதி, துணைச் செயலாளர். கே.சுரேஷ்குமார். இலக்கிய அணி செயலாளர். முல்லை பன்னீர் செல்வம் நகர செயலாளர் பாலசுப்பிரமணியன்.நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ.ஏ.ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.



திருக்கோயிலூர் தொகுதி டி. எடப்பாளையம் ஊராட்சி தனி வருவாய் கிராமமாக வேண்டிய 40 ஆண்டு கால அப்பகுதி மக்களின் கோரிக்கையை தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கிராம மக்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோருக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிட நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி. என். முருகன், ஒன்றிய கழகச் செயலாளர் பி. வி. ஆர்.சு.விஸ்வநாதன் ஒன்றிய குழுத் தலைவர் ஓம்.சிவசக்திவேல் பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன் ஊராட்சி மன்றத் தலைவர் மம்மி (ஏ) அப்துல்லா மற்றும் மகளிர், இளைஞர்கள், ஜமாஅத் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி முன்னிலை!

# ரூ.4.17 கோடியில் நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்தார்!

நாமக்கல், மார்ச் 6-

நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டியில் உள்ள மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, 3 நகர்ப்புற பேருந்துகள் மற்றும் 2 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசும் போது, நாமக்கல் மாவட்டத்தில் புதிய போக்குவரத்து அலுவலகம் திறப்பு விழாவும், புதிய வழித்தட பேருந்துகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி என இரண்டு நிகழ்ச்சிகள் இணைந்து சிறப்பாக நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மாநில நிதியிலிருந்து 2000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, முதற்கட்டமாக தற்போது 250க்கும் மேற்பட்ட பேருந்துகளை செயல்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் பழைய பேருந்துகளை புதிய பேருந்துகளாக மாற்றி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு கொண்டிருக்கிறது.

வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, வேலூர் பொன்மலர்பாளையம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்து, இராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து ஆண்டகளூர் கேட், பாச்சல் பிரிவு நத்தமேடு சிங்காளந்தபுரம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்துகள் என 2 நகர்ப்புற பேருந்துகளும், இராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம் கோவை வழித்தடத் திற்கு 1 புறநகர் பேருந்து, மோகனூர் பேருந்து நிலையத்திலிருந்து நாமக்கல், துறையூர், விழுப்புரம் கிளாம்பாக்கம் வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, நாமக்கல் பேருந்து நிலையத்திலிருந்து சேலம், ஆத்தூர், சிதம்பரம் மயிலாடுதுறை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து என 3 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜெர்மன் வங்கி நிதியுதவியோடு 2200 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இந்த பேருந்துகள் அனைத்தும் 15 வருடங்களாக உள்ள பேருந்துகளுக்கு மாற்றாக எட்டு மாத காலத்திற்குள் கொண்டு வரப்பட உள்ளது. லாரி உரிமையாளர் சங்கங்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எந்த கோரிக்கையாக இருந்தாலும் அதனை நிறைவேற்ற உறுதுணையாக இந்த அரசு இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சாலை விதிகளை பின்பற்ற வேண்டும்!**

கடந்த வருடத்தை விட இந்த வருடம் சாலை விபத்துகள் குறைந்துள்ளது. மேலும், சாலை விபத்துகளை குறைப்பதற்காக போக்குவரத்து துறையின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி வருகின்றன. மேலும் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேருந்து ஓட்டுநர்கள் விபத்து ஏற்படாமல் பேருந்து இயக்குவதற்கு ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் வகையில் 25 வருடம் விபத்து இல்லாமல் ஒட்டிய ஓட்டுநர்களுக்கு தங்க நாணயமும், 10 வருடம் விபத்து இல்லாமல் ஒட்டிய ஓட்டுநர்களுக்கு வெள்ளி நாணயமும் வழங்கப்பட்டது.

இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் சிகிச்சை அளிப்பதற்காக ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாக தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் உயர்த்தி உத்தரவிட்டுள்ளார்கள். தொடர்ந்து, பின்பற்றி விபத்து இல்லாத மாநிலமாக மாற்ற அனைவரும் சாலை விதிகளை பின்பற்ற வேண்டும் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

இவ்விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலை மைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் புதிய வட்டார போக்குவரத்து அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த வருடம் 572 சாலை விபத்துகளினால் இறந்துள்ளார்கள். இதில் 67 சதவீதம் இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல், 4 சதவீதம் நான்கு சக்கர வாகனத்தில் சீட் பெல்ட அணியாத காரணத்தினால் இறந்துள்ளார்கள். இந்த சாலை விபத்துகளில் 42 சதவீதம் மதியம் 3 மணி முதல் இரவு 9 மணி வரை ஏற்பட்டுள்ளது. இதில் 37 வயது முதல் 60 வயது வரை 45 சதவீதம் நபர்கள் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டு இறந்துள்ளார்கள். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்படும் பொழுது அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றால் மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு இருசக்கர வாகனங்களை இயக்கி காட்ட இருசக்கர வாகனங்கள் இல்லாத நபர்கள் உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து பெற்று வருகின்றார்கள். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு வரும் நபர்களுக்கு எந்த ஒரு சிரமமும் ஏற்பாடமல் இருக்க 91 வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு புதிய வாகனங்களை கொடுத்துள்ளார். மேலும், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தை தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய வட்டார அலுவலகம் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு அரசிற்கும், போக்குவரத்து அலுவலர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் மண்டலம்) சார்பில் வேலூர்பொன்மலர்பாளையம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்து, இராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து ஆண்டகளூர் கேட், பாச்சல் பிரிவு நத்தமேடு சிங்காளந்தபுரம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்துகள் என 2 நகர்ப்புற பேருந்துகளும், இராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம் கோவை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, மோகனூரிலிருந்து நாமக்கல், துறையூர், விழுப்புரம் கிளாம்பாக் கம் வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, நாமக்கல் பேருந்து நிலையத்திலிருந்து சேலம், ஆத்தூர், சிதம்பரம் மயிலாடுதுறை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து என 3 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.செந்தில்குமார், அட்மா குழுத்தலைவர் (நாமக்கல்) வி.கே.பழனிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) நிர்வாக இயக்குநர் ஆர்.பொன்முடி, துணை போக்குவரத்து ஆணையர் (ஈரோடு சரகம்) பெ.சுரேஷ், நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலர் ஆ.கா.முருகன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ,சுப்ரமணி தலைமையில், மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி பழனியப்பன் மற்றும் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி. டாக்டர் எஸ்.செந்தில்குமார் முன்னிலையில் மாநில வர்த்தக அணி செயலாளர் காசிமுத்துமாணிக்கம் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் 71வது பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கையை விளக்கி எடுத்துரைத்தார்.தர்மபுரி நகர கழக செயலாளர் நாட்டான் எம்.மாது ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள்,கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டு அரசியல் வானம் தி.மு.க.! மேகங்கள் கலையலாம், வானம் மறையுமா?


பாரதப் பிரதமர் நரேந்திர மோடி சென்ற வாரம் தமிழ்நாட்டுக்கு வந்தார். திருநெல்வேலியில் பேசும்போது அவர் பிரதமர் என்பதை மறந்து தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி.மு.க. என்ற கட்சி நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் காணாமல் போய்விடும் என்று சூளுரைத்தார்.

தேர்தல் என்று வந்தால் இப்படியான சவால் பேச்சுகளெல்லாம் இயல்புதானே என்று நினைக்கலாம். தொண்டர்களை உற்சாகப்படுத்த இப்படிப் பேசுவது வழக்கம்தானே என்றும் சிலர் கூறலாம். ஆனால், ஒரு பிரதமரே இப்படிப் பேசுவதை எளிதில் புறக்கணிக்க முடியாது.

இதற்கு முன்னரே பா.ஜ.க. தலைவர்கள் “கழகங்கள் இல்லா தமிழகம்” என்று பேசியுள்ளார்கள். “காங்கிரஸ் இல்லாத இந்தியா” என்று பேசியுள்ளார்கள். இந்தியில் ‘முக்த்’ என்பார்கள். முக்தி அடைந்துவிடும் அல்லது அழிந்துவிடும் என்று பொருள். “காங்கிரஸ் முக்த் பாரத்” என்பார்கள். அதாவது, எதிர்க்கட்சியின் இருப்பையே சகிக்க முடியாத தன்மையை வெளிப்படுத்துவார்கள்.



**பா.ஜ.க.வை பாசிசத்தன்மை கொண்ட கட்சி என்று கூறும்போது சிலர் அதை மிகைக் கூற்றாக, தேய் வழக்காக நினைக்கிறார்கள். ஆனால், ஒரே அடையாளத்தின் மீது தேசத்தைக் கட்டமைக்க வேண்டும்; அந்த அடையாளத்தை ஏற்காதவர்கள் தேசத்திற்கு அந்நியர்கள் என்ற எண்ணம் பா.ஜ.க.வின் அடிநாதமான சிந்தனை என்பதை மறந்துவிட முடியாது.**



அது என்ன ஒற்றை அடையாளம்? அதுதான் “இந்து, இந்தி, இந்தியா” என்ற சூத்திரம். அதற்கு அடிப்படை ஆரிய சமஸ்கிருத கலாச்சாரம். இந்திய தேசியம் உருவானபோதுதான், மக்கள் பேசிய இந்துஸ்தானி மொழியை சமஸ்கிருதமயமாக்கி நவீன இந்தியை உருவாக்கினார்கள். ஆரியர்களின் வேதங்களே இந்தியப் பண்பாட்டின் ஒற்றை மூலவேர் என்ற சித்திரத்தைக் கட்டமைத்தார்கள். இந்த இரண்டு அடையாளங்களுமே இந்தியா என்ற தேசம் என்று கருதினார்கள்.

காந்தி, நேரு உள்ளிட்ட வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களும் ஆரிய பண்பாட்டினை மதித்தாலும், இந்தியாவுக்குப் பல்வேறு பண்பாட்டு மூலங்கள் உண்டு என்பதை ஏற்றார்கள். வேற்றுமையில் ஒற்றுமை என்பதை கோட்பாடாக்கினார்கள். ஒற்றை அடையாளத்தை தேசத்தின் மையமாக வைத்து பிற அடையாளங்களைப் புறமொதுக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆனால், இந்து மகா சபை சாவர்க்கரும், ஆர்.எஸ்.எஸ் கோல்வால்கரும் அப்படி ஆரிய, சமஸ்கிருத, இந்தி, இந்து, இந்தியாவையே தேசத்தின் ஒற்றை பண்பாட்டு மூலமாக நினைத்தார்கள்.

அந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் வளர்ந்த பிரதமர் மோடி, தி.மு.க. காணாமல் போகும் என்று சொல்வதை வெறும் தேர்தல் நேர பேச்சாகக் கருத முடியாது. திராவிடம் என்ற மாற்றுப் பண்பாட்டை இந்தியாவில் இருக்க சகிக்காத ஒற்றை அடையாள சித்தாந்தத்தின் குரலாகத்தான் அதைப் பார்க்க முடியும்.



### தி.மு.க என்னும் திராவிட அரசியல் வானம்!

ஆரிய ஒற்றை பண்பாட்டு அடையாளத்தினை மறுத்து தென்னிந்தியாவில் உருவானதுதான் திராவிட சித்தாந்தம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தேதிராவிடதமிழ்அடையாளத்தின் புத்தெழுச்சி தொடங்கியது. இராமலிங்க அடிகள், மனோன்மணீயம் சுந்தரனார், பண்டித அயோத்திதாசர் என வரிசையாகப் பல பெரியோர்கள் ஆரிய பிராமண பண்பாட்டு கூறுகளை விலக்கி திராவிட தமிழ் அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்பவர்களாக உருவானார்கள்.

பார்ப்பனர்களின் சமூக, அரசியல் மேலாதிக்கத்தை எதிர்கொள்ளும் நவீன அரசியல் அமைப்பாக, குடிமைச் சமூக அமைப்பாக நீதிக்கட்சி உருவானது. அகில இந்தியாவிலும் ஒரு மாற்றுக் குரலாக விளங்கிய அது, 1920ஆம் மெட்ராஸ் பிரெசிடென்சியில் இரட்டையாட்சி முறையில் ஆட்சிக்கு வந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற இட ஒதுக்கீட்டு முறைக்கு கால்கோள் இட்டது.

காங்கிரஸில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய பகுத்தறிவுப் பகலவன் பெரியார், காங்கிரஸ் வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கு ஆதரவு அளிக்காததால் வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார். சூறாவளியாக தமிழ் மக்களிடையே ஊடுருவி ஆரிய ஜாதீய பண்பாட்டினை தகர்த்தெறியும் முனைப்பினை உருவாக்கினார்.

இந்தி மொழியை தமிழர்கள் மேல் திணிக்கும் முயற்சியை காலனீய கால காங்கிரஸ் சர்க்கார் 1937 ஆம் ஆண்டு மேற்கொண்டபோது பெரும் கிளர்ச்சியை தொடங்கினார். அது திராவிட நாடு கோரிக்கையாக வடிவம் கொண்டது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில்தான் இந்திய குடியரசு உருவானபோதே திராவிட முன்னேற்றக் கழகமும் உதயமானது. சுதந்திர இந்திய குடியரசு, வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்ற மக்களாட்சித் தேர்தல் நடைமுறையை நோக்கிச் சென்றது. அதை எதிர்கொள்ள தி.மு.க மக்களிடையே வலுவான ஓர் அமைப்பினை உருவாக்க முனைந்தது. ஒவ்வோர் ஊரிலும் கிளைகளை அமைத்தது, மன்றங்களை அமைத்தது. எளிய, சாமானிய மக்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தது.

உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம் மிக வலுவான அடித்தளத்திலேயே அந்த செயல்பாட்டை மேற்கொண்டது.

**முதலாவது, கீழடி ஆய்வுகள் சுட்டும் பன்னெடுங் காலத்து பண்பாட்டுச் செறிவு. திருக்குறளும், அகநானூறும், புறநானூறும், சிலப்பதிகாரமும், கொடுத்த மகத்தான பண்பாட்டு அடித்தளம்.**

**இரண்டாவது, வள்ளலார் முதல் பெரியார் வரை உருவாக்கிய சமூக புத்தாக்க நோக்கு; ஆரிய, பார்ப்பனீய பண்பாட்டு மறுப்பு. இந்தியா என்ற தேசக் கட்டமைப்பில் இருந்தாலும், திராவிட தமிழ் மக்களின் பண்பாட்டு தனித்துவத்தை வலியுறுத்தும் சுயமரியாதை, சுயாட்சி நோக்கு.**

**இந்த வலுவான அடித்தளங்களின் மேல் அரும்பாடுபட்டு அறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அவர் தம்பிகளும் உருவாக்கிய மகத்தான மாளிகைதான் திராவிட முன்னேற்றக் கழகம். பதினெட்டு ஆண்டுகளில் எந்த டாடா, பிர்லா, அம்பானி, அதானி ஆதரவும் இன்றி சாமானிய மக்களை அமைப்பாக்கி ஆட்சியில் அமர்ந்த மகத்தான மக்களாட்சி இயக்கம் தி.மு.க.**

**உண்மையில் உலகின் வேறெந்த நாட்டிலாவது இப்படி ஓர் இயக்கம் அடித்தள மக்களிடையே வேரூன்றி வளர்ந்து ஒரு மாநிலத்தின் மக்களின் அடையாளமாக, அவர்களது வரலாற்றைச் சமைக்கும் அரசியல் வானமாக விரிவுகொண்டிருக்குமா என்பது பரிசீலனைக்குரியது.**

### மேகங்கள் கலையலாம், வானம் மறையுமா?

மேற்சொன்ன வரலாற்றை சரியாகச் சிந்தித்துப் பார்த்தால்தான் புரியும். ஏன் பிற அரசியல் கட்சிகளெல்லாம் தமிழ்நாட்டில் மேகங்கள் போலிருக்க தி.மு.க வானமாக இருக்கிறது என்று.

அது இந்திய குடியரசோடு உடன் தோன்றி, அடித்தள மக்களின் அமைப்பாக திராவிட தமிழ் மக்களை தன்னுணர்வு கொண்ட அரசியல் சமூகமாகக் கட்டமைத்தது என்ற வரலாற்று உண்மைதான் காரணம். அது எப்படி நடந்தது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்திய ஒன்றிய அரசின் ஒற்றை ஆட்சி மொழியாக இந்தி மொழியை மாற்ற வேண்டும், ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் வட நாட்டு தலைவர்களிடையே கோலோச்சியது. அதை எப்படியாவது திராவிட தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என நினைத்தார்கள்.

அரசியலமைப்பு சட்டம் எழுதப்பட்டபோது பதினைந்து ஆண்டுக்காலம் ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரலாம் என்று எழுதி வைத்தார்கள். அதன்பின் ஒன்றிய ஆட்சி இந்தி மொழியில்தான் நடக்கும் என்றால் தமிழ்நாடு எப்படி அந்த ஒன்றியத்தில் பங்கெடுக்க முடியும் என்பதை வட நாட்டவர் கருதிப் பார்க்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்கிலம் ஒன்றிய அரசின் இரண்டாவது ஆட்சி மொழியாக, தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களுடனான தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர்ந்து போராடி வந்தது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



நவீன இந்திய சிற்பி பண்டிதர் நேருவிடம் அனைத்து மாநிலங்களும் ஏற்கும் வரை ஆங்கிலம் தொடரும் என வாக்குறுதியைப் பெற்றது.

நேரு மறைந்தவுடன், அவர் கொடுத்த வாக்குறுதியும் மறையுமோ, பதினைந்து ஆண்டு கெடு 1965ல் முடிந்தவுடன் இந்தி ஆதிக்கம் நிலைபெறுமோ என்ற ஐயுற வேண்டிய சூழ்நிலை உருவானது. அதற்கு முக்கிய காரணம் இன்றைய பா.ஜ.கவின் முந்தைய வடிவமான ஜன சங்கம் ஒன்றிய அரசுக்குக் கொடுத்த அழுத்தமும், நடத்திய கிளர்ச்சிகளும் என்றால் மிகையாகாது.

அந்த சூழ்நிலையில்தான் கீழப்பழுவூர் சின்னசாமி என்ற தி.மு.க தொண்டர் தன்னுடலை தீக்கிரையாக்கி இன்னுயிரை தமிழைக் காக்க ஈந்தார். “உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு” என்ற முழக்கம் பரவியது. அதற்கு அடுத்த ஆண்டு மாணவர்கள் பெரும் எழுச்சியினை தோற்றுவித்தார்கள். தமிழ்நாடு போர்க்கோலம் பூண்டது. மொழிப்போர் ஈகையர் பட்டியல் நீண்டது.

இறுதியில் ஒன்றிய அரசு பணிந்தது. அனைத்து மாநிலங்களும் ஒப்பும் வரை ஆங்கிலமும் ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாகத் தொடரும் என்பது உறுதியானது. அண்ணா தமிழ்நாட்டு பள்ளிகளில் இருமொழி கொள்கைதான் பின்பற்றப்படும் என சட்டமியற்றினார். ஆங்கிலமும், தமிழுமே பயிற்றுவிக்கப்படும், மூன்றாவது மொழி என்ற கூடுதல் சுமை ஏற்றப்படாது என்ற நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து இட ஒதுக்கீடு என்ற சமூக நீதி க் கொள்கைக்காகவும், மொழியுரிமை என்ற மக்கள் உரிமைக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பண்பாட்டு மூலாதாரத்தில் முகிழ்ந்த மக்கள் நல ஆட்சியினாலும்தான் திராவிட மாடல் என்ற அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை சாதித்துக் காட்டியது, கலைஞர் தலைமையிலான தி.மு.க ஆட்சி.

### எழுபத்தைந்தாண்டு அரசியல் காட்டுவதென்ன?

**இந்தியாவிலேயே திராவிடம் என்றும், பார்ப்பனரல்லாதோர் அரசியல் என்றும் ஆரிய மாயைக்கு எதிரான அரசியலை கட்டமைத்த இயக்கத்தை அவ்வளவு எளிதாக விட்டுவிடுமா சனாதனம்?**

**தி.மு.க தொடங்கிய காலம் முதலே ஊடகங்கள் அதற்கு எதிராக அணிதிரண்டு நின்றன. தி.மு.க அதைத் தன்னுடைய மொழியாற்றலால் முறியடித்து தனக்கேயுரிய ஊடக வெளியினை உருவாக்கியது.**

**அண்ணா மறைந்து கலைஞர் முதல்வரான பிறகு நடந்த தேர்தலிலே, தி.மு.கவை வீழ்த்த வேண்டும் என்று நெடுநாள் அரசியல் எதிரிகளான ராஜாஜியும், காமராஜரும், ஜன சங்கத்துடன் கரம் கோர்த்தார்கள். பெரியார் ராமர் முதலிய தெய்வங்களை அவமதித்தார் என்று பிரச்சாரம் செய்தார்கள். ஊழல் குற்றச் சாட்டுகளென ஊதிப்பெருக்கினார்கள்.**



**அந்தத் தேர்தலிலே சோஷலிஸப் பாதையைத் தேர்ந்தெடுத்த இந்திரா காந்தி அவர்களுடன் இணைந்து போட்டியிட்ட தி.மு.க. மகத்தான வெற்றியை ஈட்டியது. அதைக் கண்டு வெருண்டவர்கள் தி.மு.கவைப் பிளக்க வகை செய்தார்கள்.**

**ஆனால், எம்.ஜி.ஆர் உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட அரசியல் வானத்தின் கீழ் தி.மு.கவின் மாற்றுக் கட்சியானதே தவிர, அவர்களால் அந்த வானத்தை அகற்ற முடியவில்லை. தி.மு.க. தொடர்ந்து அரசியல் களத்தில் நின்றதுடன், தமிழ்நாட்டு அரசியலின் திசைகாட்டியாகவும் கலைஞர் தலைமையில் வீறு நடை போட்டது.**

**தொடர்ந்து எத்தனையோ சோதனைகள், பொய்ப் பிரச்சாரங்கள். ஈழப் போராளிகள் நடமாட்டம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்று 1990ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார்கள். அதன்பின் நடந்த தேர்தலில் ராஜீவ் காந்தி படுகொலை ஏற்படுத்திய அனுதாப அலையில் தி.மு.க அடைந்த தோல்வியை வைத்து அதை அரசியலிலிருந்து அப்புறப்படுத்தத் துடித்தார்கள்.**

**தி.மு.க. பங்கேற்ற ஐக்கிய முன்னணி அரசை , ஜெயின் கமிஷன் அறிக்கையைக் காரணம் காட்டி, தி.மு.க மீது அபாண்டமான ஐயங்களைக் கூறி கலைத்தார்கள். தி.மு.கவைத் தனிமைப்படுத்த துடித்தார்கள்.**

**எத்தனையோ முயற்சிகள் செய்தும் ஆரிய சக்திகளால், மதியூகிகளால், சூழ்ச்சி வலைப்பின்னல்களால் தி.மு.க என்ற அரசியல் வானத்தினை மறைத்திட முடியவில்லை. உதயசூரியனின் பயணத்தைத் தடுத்திட முடியவில்லை.**

**இப்போது ஆரிய மாயையின் புது முகமூடியாக வந்திருக்கும் நரேந்திர மோடியால் மட்டும் அந்த வானத்தை தகர்த்துவிட முடியுமா என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த தலைமுறையினை, இளைஞர் படையினை வரலாற்றுப் பயணத்தைத் தொடர்வதற்கு உருவாக்கி விட்டது.**

**அதனைக் கண்டு பொறுக்காமல்தான் வாரிசு அரசியல் என்று மாய்மாலம் செய்கிறார்கள். கொள்கைக்கும், பண்பாட்டுக்கும் வாரிசுகள் தோன்றத்தான் செய்வார்கள்.**

**மறைந்து ஐம்பதாண்டுக் காலம் கழித்து பெரியார் மீண்டும் புத்துயிர் பெறுகிறார். அவரைக் குறித்த நூல்கள் பெருகுகின்றன. கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா “சிந்திக்கச் சொன்னவர் பெரியார்” என்று பாடுகிறார்.**

**அண்ணா. பெரியார், கலைஞர் என்ற திராவிட இயக்கத்தின் பேராளுமைகள் இளைய தலைமுறையின் இதயங்களில், சிந்தனைகளில் நிறைகிறார்கள்.**

**எத்தனையோ தேர்தல்கள் வரலாம். வெற்றி தோல்விகள் வரலாம். கட்சிகள் பல உருவாகிக் கலையலாம். அவையெல்லாம் மேகங்கள் போல. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வானம் மறையாது.**

**ஏனெனில் அதனை நிறைத்திருப்பது பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான ஒரு பண்பாட்டின் ஒளி. அதுவே திராவிட தமிழ்ப் பண்பாடு. அதனை அழிக்க ஆரியம் எவ்வளவு முயன்றாலும் அது நடக்காது.**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காட்டூரில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற முகாமில் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும், தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் மண்டலம் மூன்றின் தலைவரும் திருச்சி மாநகர கழக செயலாளருமான மதிவாணன், காட்டூர் பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினருமான நீலமேகம், 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் செந்தில், 43 வட்டச் செயலாளர் சிவசக்தி கார்த்திக், 43 வது வட்டச் செயலாளர் முருகானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தஞ்சையில் நடைபெற்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்து கேட்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் வழங்கிய கோரிக்கை மனுவினை தலைமைக் கழகச் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக விவசாய அணிச் செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கழக மருத்துவர் அணி செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, சென்னை மேயர் பிரியா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி. செ.இராமலிங்கம் எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, என். அசோக்குமார் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகர மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவரின் 71வது பிறந்தநாள் நிதிநிலை விளக்க பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர், இள.புகழேந்தி பங்கேற்பு!

அரியலூர், மார்ச் 6 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை விளக்கப் பொதுக்கூட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் தலைமையில் பேரறிஞர் அண்ணா சிலை அருகே நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு,ஒன்றிய செயலாளர்கள் இரா கென்னடி பூ செல்வராஜ் கோ அறிவழகன் ரே அசோக சக்கரவர்த்தி ராஜன் சவுந்தர் ராஜன் மா அன்பழகன் வி எழில்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் முன்னதாக நகர கழக செயலாளர் இரா முருகேசன் வ ர வே ற் பு ரை நிகழ்த்தினார் கூட்டத்தில் தலைமை தேர்தல் பணி குழு செயலாளர் கடலூர் இள புகழேந்தி மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, தலைமை கழக பேச்சாளர்கள் இரா. இளஞ்செழியன்,சண்கோ. சண்முகம், கவிஞர் வீரமுரசு, ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

கழகத் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்துள்ள காலை சிற்றுண்டி திட்டத்தால் பள்ளிக்கு வரக்கூடிய குழந்தைகள் பசியாறி உணவு உண்டு சந்தோஷமாக கல்வி பயின்று வருகின்றனர். புதுமை பெண் திட்டத்தால் அரசு பள்ளியில் பயின்று பட்டப்படிப்பு படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கும் திட்டத்தால் மேற்படிப்பு பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**மோடியின் கதை கேட்க தமிழ்நாடு தயாராக இல்லை!**

மகளிர் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், மகளிர் உரிமை தொகை ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் இந்தியாவிற்கு முன்மாதிரியான திட்டமாக அமைந்துள்ளது. நமது முதலமைச்சர் கொண்டு வந்த இந்த திட்டத்தை பார்த்துதான் மத்திய பிரதேசத்தில் ஆளுகின்ற பாஜக அரசு இத்திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இலவசமாக மக்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என மோடி சொல்கிறார் ஆனால் மோடி தலைமையிலான பாஜக ஆளக்கூடிய மாநிலங்களில் இத்திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள் என்றால் இது எவ்வளவு முக்கியமான மக்களுக்கான திட்டம் என்பது தெரிய வரும், இவ்வளவு திட்டத்தையும் கொடுப்பது நம்முடைய முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் இன்னும் ஒரு மாதத்தில் தேர்தல் வர உள்ளது தேர்தலை முன்னிட்டு நம்மை ஏமாற்ற மோடி தமிழகத்திற்கு வந்து கொண்டே உள்ளார் 10 நாளைக்கு ஒரு முறை வந்து விடுகிறார். பொதுக் கூட்டங்கள் நடத்தி புதுசு புதுசா கதை சொல்லி நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதை செய்வோம் இதை செய்வோம் என கூறி வருகிறார். கடந்த பத்தாண்டு ஆட்சியில் சொன்னதை எதையாவது மோடி செய்து உள்ளாரா என்றால் இல்லை கருப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் போடுவேன் என்றார் ஆனால் இது வரை போடவில்லை கேஸ் மானியம் குறைப்பு உர மானியம் குறைப்பு என்பது உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு எவ்வளவு கஷ்டத்தை கொடுக்க முடியுமோ அவ்வளவு கஷ்டத்தை கொடுக்கும் ஆட்சியாக மோடி ஆட்சி உள்ளது. மக்கள் மீது ஏற்றும் சுமை ஒரு புறம் என்றால் அரசுக்கு சொந்தமான விமான நிறுவனத்தை டாட்டாவிற்கு விற்றது தனது நண்பர்களான அதானி அம்பானிக்கு கப்பல் துறை முகத்தை விற்கிறார் நாட்டு மக்களுக்கு சேவை செய்யும் நிறுவனத்தை தங்களுக்கு ஆதரவான தொழிலதிபர்களுக்கு விற்கும் ஏஜென்ட்டாக தான் மோடி செயல்படுகிறார்.

சமீபத்தில் பெய்த கனமழையால் சென்னை, மற்றும் தூத்துகுடி மாவட்டம் பெரும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி கேட்கப்பட்டது ஒரு பைசாக் கூட இது வரையில் தமிழகத்திற்கு வழங்கவில்லை ஒன்றிய மோடி அரசு. ஆனால் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் எவ்வளவு பெரிய நிதி நெருக்கடியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனே களத்தில் இறங்கி நிவாரணப் உதவிகள் வழங்கி அதிலிருந்து மக்களை மீட்டெடுத்தார்.

இந்தியா ஒரே நாடு தான் அதில் தமிழ்நாடு தனி என்பதை நிரூபித்து வருகிறோம் இந்திக்கு எதிராக போராடி தமிழை காப்பாற்றியதன் காரணமாகத் தான் சொந்த மொழியான தமிழ் மொழியில் நாம் பேசி வருகிறோம் ஆனால் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைமுறையில் இருந்த மொழிகளை மறக்கடித்து இந்தி பேச வைத்து விட்டார்கள் ஒரே நாடு ஒரே மொழி ஒரே மதம் ஒரே ஆட்சி ஒரே கட்சி ஒரே தலைவர் அது மோடி என்ற நிலையை உருவாக்கி நாட்டு மக்களை தங்களது சர்வாதிகாரத்திற்கு கீழே கொண்டுவர முயற்சிக்கும் மோடிக்கு எதிராக நமது முதல்வர் இந்தியா கூட்டணியை உருவாக்கியுள்ளார் இதனால் அனைத்து மாநிலங்களிலும் மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பி வருகின்றனர், இதனால் மிரண்டு போன மோடி எதிர்க்கட்சி தலைவர்கள் எல்லோரையும் கைது செய்து மிரட்டினால் அவர்கள் பயந்து கொண்டு எதிர்த்து நிற்க மாட்டார்கள் என நினைத்து கொண்டு எதிர்க்கட்சி முதலமைச்சர் எதிர்க்கட்சி அமைச்சர்களை மிரட்டுகிறார், கைது செய்கிறார் நமது முதலமைச்சர் தலைமையில் அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி கைது செய்து பல மாதமாகியும் இதுவரை ஜாமீன் கூட கொடுக்க மறுக்கிறார்கள் கொலை வழக்கில் உள்ளே போனால் கூட இரண்டு மாதத்தில் ஜாமீன் கிடைத்து விடுகிறது, ஆனால் அடிப்படை ஆதாரமில்லாத வழக்கில் கைது செய்து விட்டு அவர் இல்லாமல் கொங்கு மண்டலத்தில் தேர்தலை சந்திக்கலாம் என திட்டமிடும் கட்சியாக பா.ஜ.க. உள்ளது. இதற்கெல்லாம் முடிவு கட்டும் தேர்தலாக வரும் நாடாளுமன்றத் தேர்தல் இருக்க வேண்டும் நமது முதலமைச்சர் தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற வேண்டும் மோடி தலைமையிலான ஆட்சி வீழ வேண்டும் என நாம் அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் பாளை. அமரமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோக சக்கரவர்த்தி,கீதா ஜெயவேல்,நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தெய்வ. இளையராஜா,

கே.சி.லூயிகதிரவன், முருகானந்தம், செல்வம், கருப்புசாமி, ரவிக்குமார், சஞ்சீவிகுமார், அருண்ராஜ், ஆதி. இளங்கோவன், ஜெயக்குமார், செ.இளஞ்செழியன், வின்சென்ட் ராஜா, மீனா சாமிநாதன், வழக்கறிஞர்கள் கதிரவன், ராஜா, நகர நிர்வாகிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், குணா, விஜயகுமார், செல்வராணி ரவீந்தர், சண்முகம், ஜெயகுமார், க.ராமு,க.கருணாநிதி, விஜயலட்சுமி செல்வராஜ், தங்கை எழில்மாறன், நகர் மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, இரா. சுர்ஜித், காந்திமதி சுகுமாரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி ஊராட்சியில் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் ஆலோசனைபடி நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க வெங்கடேசன் கழகக் கொடியேற்றி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை(பிரியாணி) உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதி திராவிடர் நலக் குழு அமைப்பாளர் விருத்தாசலம் எஸ். ராமு, மாவட்டப் பிரதிநிதி வயலூர் கு.பழனிச்சாமி, மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் கொத்தனூர் க.ரகுநாதன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சேப்பாக்கம் தனசேகரன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் நாரையூர் எம். குணசேகரன், பூலாம்பாடி கழக நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் என். முத்துக்குமாரசாமி, க.முத்துகருப்பன், பி.கொளஞ்சி, அ. சுப்பிரமணியன், எஸ்.சையத் ரஃபிக், எம்.சையத் உசேன், ரஷீத் கான், எம். பரமசிவம், கே. ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இஸ்லாமிய மக்களுக்காக ரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சி தயாரிக்க

# பள்ளிவாசல்களுக்கு 7,040 மெட்ரிக் டன் அரிசி வழங்க அனுமதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 6 -

இஸ்லாமிய மக்களுக்காக ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க 7,040 மெட்ரிக் டன் அரிசி பள்ளி வாசல்களுக்கு வழங்கிட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க ஒவ்வொரு ஆண்டும் பள்ளிவாசல்களுக்கு பச்சரிசி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 2024-ஆம் ஆண்டிலும் ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

2024-ஆம் ஆண்டு, ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாக பள்ளிவாசல்களுக்கு மொத்த அனுமதியின்கீழ் நோன்பு கடைபிடிக்கப்படும் நாட்களுக்கு மட்டும் பச்சரிசி வழங்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிவாசல்களுக்குத் தேவைப்படும் அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, 7,040மெட்ரிக் டன் அரிசி மொத்த அனுமதி மூலம் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும். இதனால், அரசுக்கு 26 கோடியே 81 இலட்சத்து 53 ஆயிரத்து600 ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

### திருப்பூர் மாவட்டம் முத்தூர் அங்கன்வாடி மையத்தில்

# போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 6 -

திருப்பூர் மாவட்டம் முத்தூர் அங்கன்வாடி மையத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாமைத் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாத நோயை அறவே ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நாடு முழுவதும் பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தை களுக்கும், ஒரே நாளில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் 895 மையங்கள் மூலமாகவும், நகர்ப்புறங்களில் 259 மையங்கள் மூலமாகவும் என மொத்தம் 1,154 மையங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கூடுதல் தவணை போலியோ சொட்டு மருந்து ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், டோல்கேட் மற்றும் தனியார் சொட்டு மருந்து முகாம் மையங்களிலும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. இதில் 26 நடமாடும் குழுக்கள் மூலமாகவும், பேருந்து நிலையங்கள் மற்றும் புகை வண்டி நிலையங்களில் 23 குழுக்களும் அமைத்து சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இப்பணிக்காக சுகாதாரத்துறை, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த 4,616 பணியாளர்கள் மற்றும் ரோட்டரி சங்கத்தினர் ஈடுபடவுள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் சுமார் 1.98 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. இம்முகாம்களுக்கு தேவையான சொட்டு மருந்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு தயார் நிலையில் உள்ளது. அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து தரமானது, பாதுகாப்பானது உலக சுகதார நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்றது. எனவே 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு இதுவரை எத்தனைமுறைபோலியோ சொட்டு மருந்து அளித்திருந்தாலும் முகாம் நாளான இன்று கூடுதல் தவணையாக போலியோ சொட்டு மருந்து அளித்து தங்கள் குழந்தைகளை போலியோ நோயிலிருந்து பாதுகாப்பதுடன் போலியோ நோய் இல்லாத இந்தியாவை உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே. ஆர். முத்துக்குமார், ஒன்றியக் கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, வட்டார மருத்துவ அலுவலர் டி.ராஜலட்சுமி, முத்தூர் மருத்துவ அலுவலர் பிரசாத் தாமரைக்கண்ணன், பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள், துணைத்தலைவர் மு.க.அப்பு, நல்லூர் அப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில்!

# நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடியில் முதல்வர் பிறந்த நாள் நிகழ்ச்சி!

## சி.வெ.க. வெங்கடேசன் பங்கேற்பு!

கடலூர், மார்ச் 6 -

கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாவட்டக் கழக செயலாளர் சி.வெ.கணேசன் ஆலோசனைபடி நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில் கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க வெங்கடேசன் கழகக் கொடியேற்றி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை (பிரியாணி) உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதி திராவிட நலக் குழு அமைப்பாளர் விருத்தாசலம் எஸ். ராமு மாவட்டப் பிரதிநிதி வயலூர் கு.பழனிச்சாமி மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் கொத்தனூர் க.ரகுநாதன்,

மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சேப்பாக்கம் தனசேகரன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் நாரையூர் எம். குண சேகரன், பூலாம்பாடி கழக நிர்வாகிகள் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் என்.முத்துக் குமார சாமி, க.முத்து கருப்பன், பி. கொளஞ்சி, அ. சுப்பிரமணியன், எஸ்.சையத் ரஃபிக், எம்.சையத் உசேன், ரஷீத் கான், எம். பரமசிவம், கே. ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



உதகை நகர தி.மு.க. சார்பில் ஏ.டி.சி. பகுதியில் ”எல்லோருக்கும் எல்லாம்” திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் தமிழக நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் ஜார்ஜ் தலைமை வகித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் பழ.சிவ.ஜெயராஜ். மாவட்டக் கழகச் செயலாளர் முபாரக் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, ஒன்றியச் செயலாளர்கள் காமராஜ், பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர்கள் மோகன் குமார், துரை, இளைஞரணி சசிகுமார், நகரமன்றத் தலைவர் வாணீஸ்வரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நகர துணைச் செயலாளர் கார்டன் கிருஷ்ணன் நன்றி கூறினார்.

# மோடியின் ‘பிரம்மாஸ்திரம்’ தி.மு.க.வை ஒன்றும் செய்துவிட முடியாது!

பேரறிவால், பெரும்ஆற்றலால், தியாகத்தால், கேளாரையும் வேட்ப மொழிகின்ற சொற்திறத்தால், தமது எழுத்தால், சிந்தனையால், மக்கள் திரட்சியைத் தம் பக்கம் ஈர்த்து வைத்திருந்த அறிவார்ந்த பெருமக்கள் எல்லாம் தி.மு.க.வை ‘இல்லாமல்’ ஆக்க முடியவில்லை. தி.மு.க.வை ஒழிக்க முடியவில்லை. ஆனால் அவர்கள் எல்லாம் தி.மு.க.வை ஒழிப்பதற்கு முழக்கத்தை எழுப்பினார்கள். இன்று அவர்கள் இல்லை. தி.மு.க. இருக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த பிப்ரவரி 27, 28ஆம் தேதிகளில் பிரதமர் மோடி இரண்டு நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தூத்துக்குடி குலசேகரன் பட்டினத்தில் விண்வெளி ஏவுகணை தளம் அமைக்கிற தொடக்க விழாவினைத் தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசுகிறார். தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகிறது. தமிழில் வணக்கம் சொல்லி ஆங்கிலத்தில் ஆரம்பித்து இந்தியில் உரையாற்றுகிறார். இடையிடையே ஆங்கிலச் சொற்கள் வந்து போகின்றன. இந்தியின் வளம் அது!

மேடையிலே நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அமர்ந்து இருக்கிறார். அமைச்சர் எ.வ.வேலுவும் இருக்கிறார். பிரதமர் மோடி பேசுகையில் ஒரு மரபுக்காக, நாகரிகத்திற்காக, கட்டாயம் பேணப்பட வேண்டிய பண்பாட்டிற்காக கூட அந்த இரு தி.மு.க.வினரின் பெயர்களை பிரதமர் மோடி உச்சரிக்கவில்லை. அவ்வளவு நயத்தக்க நாகரிகத்தை உடைய அந்த மாமனிதர் இந்திய நாட்டின் தலைமை அமைச்சர்– பிரதம மந்திரி!

பல்லடத்தில் இரண்டு அ.தி.மு.க.வின் தலைவர்களை வானளாவ புகழ்ந்து தள்ளினார். பாவம் மோடியின் அரசியல் நிலை அது; மக்களின் செல்வாக்கு அது! இடந்தேடுவதற்கு மரித்தவர்களை புகழுகிறார்கள். மிச்சம் மீதியை மக்கள் இட்டு விட மாட்டார்களா? – என்று ஏங்குகிறார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. எதைத் தின்றாவது பித்தத்தைப் போக்கிக் கொள்ள நினைக்கிறார்கள். ஆனால் போகிற போக்கில் நெல்லை – பாளையில் பிரதமர் மோடி ‘தி.மு.க.வை இனி இல்லாமல் செய்வேன்’ என்று முழங்கி இருக்கிறார். இது நமக்கு வேடிக்கையாகவும் வியப்பாகவும் இருந்தது.

காலச் சக்கரம் பின்னோக்கி சுழல்கிறது. சில காட்சிகள் நிழலுருவங்களாக வந்து போகின்றன. இப்படித்தான்....

‘தி.மு.க.வை மூட்டைப் பூச்சியைப் போல் நசுக்கி விடுவேன்’ என்றார்கள். முடியவில்லை. நெஞ்சம் நிமிர்த்திக் கொடியைப் பறக்க விட்டோம்.

வெளியிலிருந்து பேசினால் போதுமா? தி.மு.க.வால் சட்டபைக்கு வர முடியுமா? – என்று சவால்விட்டார்கள். சட்டசபைக்குச் சென்றோம்.. சென்னை மாநகராட்சியையும் பிடித்தோம்.

நம் வளர்ச்சியைப் பார்த்தார்கள். அதிர்ந்தார்கள். தி.மு.க.வை ஒழிப்பதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தனை செய்தார்கள். பிரிவினைத் தடை சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தடை சட்டத்தையும் கடந்தோம்.

மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தோம். களபலி தந்தோம். சிறை நிரப்பினோம். நமது தனித்தன்மையை நிலை நாட்டினோம்.

தமிழக ஆட்சியைக் கைப்பற்றினோம். வெற்றிக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. இந்தியாவை நம்மைப் பார்க்க வைத்தோம்.

சில சாதனைகளை நிகழ்த்துவதற்குள் அறிஞர் அண்ணாவை இயற்கை அழைத்துக் கொண்டது. அந்த அதிர்ச்சியையும் திகைப்பையும் தாண்டினோம்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கட்சிக்கும் ஆட்சிக்கும் திசைமானி ஆனார்.

எதிரிகள் புருவத்தை உயர்த்தினர். கண்களை அகலத் திறந்து பார்த்தனர். நமது அணிவகுப்பு முன்னிலும் அதிவேகமாயிற்று.

நமது அன்பான எதிரிகள் தேர்தலில் தி.மு.க.வை ஒழித்துக் கட்ட மாபெரும் கூட்டணி அமைத்தனர். ‘ஒழிந்தது தி.மு.க.’ என்று அவர்கள் வாக்குகள் எண்ணும் போதே அமைச்சரவை அமைக்கலானார்கள். நாக்கைத் தொங்க விட்டார்கள்.

தி.மு.க.தான் அதிக எண்ணிக்கை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களை எப்போதும் இல்லாத அளவுக்கு பெற்றது. நமது மக்கள் செல்வாக்கு எல்லாக் கட்சியினரையும் அதிர வைத்தது.

மீண்டும் ‘உட்பகை’ கண்விழித்தது. சூழ்ச்சி உலா வந்தது. 11 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்னுமொரு பிளவைத் தி.மு.க. சந்தித்தது.

தேர்தல் நடந்து முடிந்து (1971) 19 மாதங்களுக்குப் பிறகு பிளவு. ஆம்; தி.மு.க.வை ஒழிக்க சதி; உளவுத் துறையின் சதி. வருமான வரி நெருக்கடி. எம்.ஜி.ஆர். 1972 இல் அ.தி.மு.க.வைத் தோற்றுவித்தார். அதற்காக தி.மு.க.மீது சில குறைகளைச் சொன்னார்.

தி.மு.க.வை ஒழிக்க முடியவில்லை. முத்தமிழ் அறிஞர் கலைஞர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவற்றினுக்கு பதில் அளித்து ஒரு புத்தகமே அச்சிட்டு சட்டமன்றத்தில் வைத்தார் – கலைஞர்.



**க.திருநாவுக்கரசு**

திராவி இயக்க எழுத்தாளர்

அப்போதைய ஒன்றிய அரசு இதனால் நிறைவடையவில்லை, ஆண்டுகள் சென்றன. ஒன்றிய அரசு நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியது.

இந்தியாவிலேயே நெருக்கடி நிலையை எதிர்த்து முதன் முதலில் தீர்மானம் நிறைவேற்றிய கட்சி தி.மு.க. இதனால் 1976 ஜனவரி 31 ஆம் தேதி முதன் முதலாகத் தி.மு.க. ஆட்சிக் கலைக்கப்பட்டது.

நெருக்கடி காலத்தில் அ.தி.மு.க. – அ.இ. அ.தி.மு.க. ஆயிற்று. தேசியக் கட்சியாகி விட்டது. இப்போது அதன் பொதுச் செயலாளர் சொல்கிறார். ‘இரண்டு தேசியக் கட்சிகளோடு கூட்டணி இல்லை’ என்று! இது எப்படி இருக்கு?

தி.மு.க. – தி.மு.க.வாகவே இருந்தது. இதன் உள்ளீடு பீடும் பெருமையும் கொண்டது அல்லவா? தி.மு.க. எனும் பெயரை மாற்றக் கூடாது என்கிற உறுதியை நிலை நாட்டியவர் கலைஞர் அல்லவா காரணம்!

தி.மு.க. நெருக்கடி நிலையை எதிர்த்ததால் இப்போதைய நமது முதல்வர் ஸ்டாலின் உட்பட 500க்கும் மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். சிட்டிபாபு, பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறை தாக்குதல்களால் தமது இன்னுயிரை இழந்தனர்.

கட்சியை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நெருக்கடி காலத்தில் ‘அன்பகத்தை’ தலைமைக் கழகமாகக் கொண்டு இயங்கினார். அப்போது அறிவாலயம் கட்டப்படவில்லை.

கழகம் பெயர் மாற்றம் பெற்றால்தான் இருக்கும். கலைஞர் கைது செய்யப்பட்டு விடுவார் – என்கிற செய்திகள் தமிழகம் முழுமையும் காட்டுத் தீப்போல் பரவியது.

கலைஞர் ‘எனது கடன் பணி செய்து கிடப்பதே’ என்றபடி உறுதியாக நின்று கலங்காமல் கழகத்தை இயக்கினார்; அவரும் இயங்கினார்.

‘கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை’ என்ற எண்ண முடிய தொண்டர்களின் பெருத்த ஆதரவோடு கழகத்தைக் கட்டிக் காத்தார் – கலைஞர்!

எம்.ஜி.ஆரின் செல்வாக்கு அவருக்கு ஆட்சியதிகாரத்தைத் தொடர்ந்து வழங்கி இருக்கலாம். அதனால் அவரால் தி.மு.க.வை ஒழித்துவிட முடியவில்லை. அவரைப் புகழுபவர்கள் ஒழித்து விட முடியுமா? அவரைப் பின்பற்றும் ‘சவடால்’ வீரர்கள்தான் ஒழித்து விட முடியுமா? முடியாது; முடியாது.

எம்.ஜி.ஆரோடு அவர் கம்பெனிகளும் 30 ஆண்டுகள் ஆட்சியதிகாரத்தில் இருந்தன. இக்கட்டங்களில் கழகத்தின் கொள்கைகள் சிதைக்கப்பட்டன. கழகம் நின்று போராடியது. சிறை நிரம்பியது. தனது இருப்பை மிக பலமாக்கியது. கழகம் அழியவில்லை. அதன் தேவை அதிகரித்தது.

அடுத்து தி.மு.க.வில் ‘செங்குத்தான’ பிளவும் நிகழ்ந்து முடிந்தது. அதுவும் தி.மு.க.வுக்கு ‘கண நேர’ மத்தாப்பாயிற்று.

தி.மு.க., எம்.ஜி.ஆர். காலத்திலும் ஜெயலலிதாவின் காலத்திலும் சிறந்த எதிர்க்கட்சியாகப் பணியாற்றி இருக்கிறது. அவர்களை எல்லாவகையிலும் அம்பலப்படுத்தி இருக்கிறது. ஊழலுக்காக சிறை தண்டனையும் பெற்றார்கள்.

அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5 முறை ஆட்சியில் முதல்வராகப் பதவி வகித்தபோதும் தி.மு.க.வின் சாதனைகள் அனைத்தும் பதியப்பட்டு நூல்களாக வெளிவந்து இருக்கின்றன.

தி.மு.க.தோன்றி முக்கால் நூற்றாண்டு ஆகப்போகிறது. நமக்கென்று ‘முன்னோர்’ வரலாறு உண்டு. அதன் தொடர்ச்சியாக 7–ஆவது முறை தி.மு.க.வின் ஆட்சியின் அடையாளமாகக் கழகத் தலைவர் ஸ்டாலின் முதல்வராக இருந்து வருகிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. பா.ஜ.க.வுக்கு எதிரான ‘இந்தியா’ அணியைக் கட்டமைப்பதில் தி.மு.க. முக்கியப் பங்கு வகிக்கிறது. அது மோடியை அப்புறப்படுத்துவதில் முழு மூச்சாகச் செயல்படுகிறது.

பிரதமர் மோடிக்கு ஆத்திரம் உச்சிக்கு ஏறுகிறது. ,அதனால் ‘தி.மு.க.வை இல்லாமல் ஆக்குவேன்’ என்று ஹிட்லர் போல் பேசுகிறார். அவர்களின் இயல்பான பாசிஸ்ட்டுகளின் முகத்தைக் காட்டுகிறார்.

தி.மு.க.வை ஒடுக்கவும் ஒழிக்கவும் ஒன்றிய அரசின் அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஆடுகிறார் மோடி!

ஆடுகிற ஆட்டம் கருத்துக்குக் கருத்தாக இல்லை. வாதப் பிரதிவாதமாக இல்லை. நாடாளுமன்ற, சட்டமன்றக் கருத்துப் பரிமாற்றமாக இல்லை. மொத்தத்தில் ஜனநாயகமாக இல்லை.

தமிழ்நாட்டு பா.ஜ.க.காரர்கள் சிலரை ஆளுநர் ஆக்கினார் மோடி! அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து போகிறார்கள். தினவெடுத்த மாடுகள் சாலையைக் கடக்கிறபோது தினவு கல்லைத் தேய்ப்பது போல தி.மு.க.வைத் தாக்கி விட்டுப் போகிறார்கள்.

புரோகித்தைத் தொடர்ந்து ஆளுநராக உள்ள ஆர்.என். ரவியின் அரசியல் சட்ட அத்துமீறல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இதற்குக் காரணம் மோடியும் அமித்ஷாவும்தான்! அவர்கள் ஆளுநரை ‘அத்துமீறல்’ செய்ய உற்சாகப் படுத்துகிறார்கள்.

ஆளுநர்களின் அத்துமீறல்கள் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் பேயாட்டம் ஆடுகிறது. பிரதமர் மோடியும் அமித்ஷாவும் புன்னகை பூத்துக் கொண்டு இருக்கிறார்கள். நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்கள்.

குடியரசுத் தலைவர் மாநில முதல்வரை மதிக்கவில்லை. நிகழ்ச்சிக்குத் தேதியை தந்துவிட்டு வரவில்லை. எந்தத் தகவலும் சொல்லவில்லை.

ஆளுநர்கள், அரசியல் சட்டத்தை மதிக்கவில்லை.

அமித்ஷா தமிழகம் வந்து போகும் போதெல்லாம், தி.மு.க.வைப் பற்றி ‘ஆகாசப் புளுகு’ புளுகுகிறார்.

பிரதமர் மோடி தமிழ் பேசி தமிழ் இலக்கிய மேற்கோள் காட்டி மயக்கப் பார்க்கிறார். தமிழர்கள் மசிய மாட்டார்கள்.

தி.மு.க.வை பிரதமர் மோடி ‘இல்லாமல் ஆக்குவேன்’ என்று கொக்கரிக்கிறார். ஒன்றிய பா.ஜ.க. அரசை வைத்துக் கொண்டு மிரட்டுகிறார். அச்சுறுத்துகிறார், அரசியலில் அராஜக வழிகளை கையாளுகிறார். இதற்கெல்லாம் தி.மு.க.பணிந்து விடாது. எதிர்கொள்ளும் – சந்திக்கும்.

தி.மு.க.வின் மரபு என்பது சிந்து சமவெளி நாகரிகத்தில் வேர் பாய்ச்சி நிற்பது. சங்ககால விழுமியங்களைப் பெற்று இயங்குவது. அது வெறும் அரசியல் ஆட்சியதிகாரங்களுக்கு ஆனது மட்டுமில்லை.

தி.மு.க. – திராவிட இயக்கத்தின் அரசியல் பிரிவைச் சார்ந்தது. தி.மு.க.வுக்கு அழிவு இல்லை, நேராது; வராது. அது காட்டுத் தீ அல்ல; வீட்டு விளக்கு, அந்த ஆதித் தீயைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் உள்ளது.

ஆரியக் கலாச்சாரம் அஸ்திரங்களைக் கொண்டது. திராவிடக் கலாச்சாரம் அறிவாயுதக் கிளர்ச்சியை உடையது. பிரதமர் மோடி இன்னமும் ‘ஆரிய வர்த்தமாய்’ இருக்கிறார். தென்னிந்தியாவோ இப்போதும் ‘திராவிட தேசமாய்’ இருக்கிறது என்பதை நாம் பிரதமருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

பிரதமர் மோடி தி.மு.க.வை ‘இல்லாமல் ஆக்குகிற’ பிரம்மாஸ்திரத்தைப் பெற்றாலும் அவர் அவ்வமைப்பை ஒன்றும் செய்துவிட முடியாது. புராண அகராதிகளின்படி பிரம்மாஸ்திரம் என்பது ஓர் ஏவுகணை ஆயுதம். ஏவியதற்கு பிறகு தானாக இயங்கும். வெகு சக்தி மிக்கது. இதற்கு இணையான வேறு ‘ அஸ்திரம்’ இல்லை.

இந்த அஸ்திரத்தை சிவன் அகஸ்தியருக்கு வழங்கினார். அகஸ்தியர் அக்நிவேசனுக்கு வழங்கினார். அக்நிவேசன் துரோணருக்கு வழங்கினார். துரோணர் அர்ச்சுனனுக்கு வழங்கினார். அந்த அஸ்திரத்தை மனிதர்கள் மேல் ஏவமுடியாது. மனிதர்கள் மேல் ஏவினால் மூன்று உலகங்களும் அழிந்துவிடும். இந்த அஸ்திரத்தை தேவர்களின் மேல்தான் ஏவ முடியும், ஆகவே எதிரிகள்கூட தேவர்களாக இருக்கவேண்டும்.

நமது பிரதமர் இத்தகைய பிரம்மாஸ்திரத்தை விதிவிலக்குப் பெற்று வந்து தி.மு.க. என்கிற அமைப்பின் மீது ஏவினாலும் தி.மு.க.வை அவரால் அழிக்கமுடியாது; ஏனெனில் பிரம்மாஸ்திரம் என்பது கற்பனை. அதைப்போல தி.மு.க.வை வார்த்தை ஜாலம் காட்டி பிரதமர் மோடி கதைத்து அழித்துவிட முடியாது; அது அவர் வீட்டுப் புழக்கடையில் முளைத்த காளான் அல்ல.





நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டியில் உள்ள மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடத்தை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்து, 3 நகர்ப்புற பேருந்துகள் மற்றும் 2 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்கனந்தல் பேரூராட்சி அம்மாப்பேட்டையில் நல்லதண்ணீர்குளம் மற்றும் காரியகொட்டகையைச் சுற்றி கம்பி வேலி மற்றும் நடைபாதை அமைக்கும் பணியினை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஷர்வன்குமார் ஜடாவத் எம்.எல்.ஏ., தலைமையில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் திறந்து வைத்தார். பணியின் மதிப்பீடு 12.76 இலட்சம். உடன் வடக்கனந்தல் பேரூராட்சி மன்றத் தலைவர் பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார் வடக்கனந்தல் பேரூராட்சி துணைத் தலைவர் இரா.தண்டபாணி நன்றியுரையாற்றினார்.

# தமிழின வரலாற்றின் தடமா! தமிழன்னை துயில்கின்ற இடமா!



டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர்



**கா**லம் வென்ற
கலைஞருக்கு
ஒரு கவிதைக் கடிதம்!

தாகவிடாய் தணிக்கின்ற
தமிழ்நாட்டுச் சமுத்திரமாய்
வரம்போல வந்துதித்த
எங்கள்
வரலாற்றுத் தலைவனே!

எழுதுகோல் செங்கோல்
இரண்டாலும் தமிழகத்தைப்
பழுதின்றிக் காத்த
பாவலனே.. காவலனே!

வங்கக் கடலோரம்
பொங்கும் அலையோரம்
புகழ் பூத்து நிற்கும்
உன் நினைவிடத்தில் இருந்து..

எழுதவும் பேசவும்
எழுத்தெண்ணி வீசவும்
உன்னிடமே கற்ற
உன் கால ஏகலைவன்,
வழுதாவூர்த் தொண்டன்
வரையும் கடிதம் இது.

நிறமாலை காட்டும்
நித்திலச் சொல்லெடுத்து
மொழிமாலை கட்டி
முத்தமிழாய்த் தந்தவனே..
நீயங்கு நலமா?

நீ வளர்த்த நாங்கள்
நின்புகழ் தவப்புதல்வர்
நீ படைத்த தமிழ்நிலம்
அனைத்தும் நலம்.

தளபதியின் புண்ணியத்தால்
தாய்மார்கள் நலம்.
உதயநிதி என்னும்
புதிய சூரியனால்
இளைஞர்கள் தனிநலம்.
உன்
பிள்ளைச் செல்வத்தால்
பள்ளிப் பிள்ளைகள்
எல்லாமே நனிநலம்.

நீயிங்கு இல்லாத
குறையொன்று மட்டுமே!
மற்றபடி
குறையொன்றும் இல்லை
கொற்றவனே!

அஞ்சுமுறை தமிழகத்தை
ஆண்டவன்நீ என்பதனால்
பஞ்சபூதம் அனைத்திலும்
பரந்து நிற்கும் நீ...
சிறந்து நிற்கும்
சித்தரஞ்சன் சாலைச்
சிற்பியால்
இன்று
உயர்ந்தோங்கி நிற்கிறாய்
உலகத்தின் கூரை வரை!
அண்ணா எனும் கடலருகே
அரசியல் செய்த உனக்கும்
உன் உரிமைத் தலைவன்
தனக்கும் சேர்த்து
ஓர் அழகியல் பூமி அ
மைத்து விட்டார்
உன்
அருமந்த புதல்வர்!

அசைவதே வாழ்வாய்க்
கொண்ட
அலைகடல் அருகே
அசைவிலாது உழைத்த
உன்னை
ஆயிரம் கோணங்களில்
அர்த்தப்படுத்தி இருக்கின்றார்-
அரசர்க்கெல்லாம்
அரசராய் வீற்றிருக்கும்
எங்கள்
அன்புத் தளபதி.

ஒரு நூற்றாண்டு
அரசியலின்
உச்சித் திலகமாய்
விளங்கி
அடுத்த நூற்றாண்டின்
ஆலாபனையாகவும்
இசைக்கப்படும் உன்
எண்ணச் சித்திரங்களை
என்னமாய் வரைந்திருக்கிறார்
எங்கள் முதல்வர்!

நெஞ்சகத்தில்
எடுத்துக் கட்டி
நினைவகத்தில்
வடித்துக் கூட்டி
அஞ்சுகத்தாய் மகனாருக்கு
அவர்பேரன் செய்த சீரை
ஆர் செய்வார்
அவரல்லாமல்?

நீ
நாவை அசைத்தால்
பூவை அசைத்தாற்போல்
புல்லரிக்குமே..தலைவா!

இமயப் பனிக்காற்று
இதயந் தொட்டதுபோல்
குளிரடிக்குமே..தலைவா!

காட்டுத்தீ வந்து
கூட்டத்தில் புகுந்ததுபோல்
பொறிபறக்குமே.. தலைவா!

கவனப் புலன்கள்
கடுகளவும் அகலாமல்
ஆச்சரிய விழிகளை
அகலப் படுத்துமே..தலைவா!

எத்தனை பெருமிதம்
இவர்பேச்சால் விளைகிறது
என்று நினைக்கையில்..
ரத்தக் கொதிப்பு
ரகசியமாய் எழுமே..
எங்கள்
ராஜியத்தின் தலைவா!

அவை அத்தனையும்
உன்
அற்புத நினைவிடத்தில்
பாதம் பதித்த
பத்தே நொடித்துளியில்
பற்றிக் கொள்கிறது
என்றால்
பார்த்துக் கொள் தலைவா..!

இந்த அதிசயத்தை
இங்கே நிகழ்த்திய
ஈடும் எடுப்புமிலா
இலட்சிய மனிதர்,
உன் வார்ப்பில் கிட்டிய
உத்தமர் தளபதியை –
எட்டுத் திசையும்
எட்டிப் பிடித்து
எட்டாவது அதிசயம்
இயற்றிய தளபதியை –
இன்பத் தாயகமே
இன்று
ஏத்தி மகிழ்கிறது
தலைவா!

தமிழின வரலாற்றின்
தடமா – இல்லை
தமிழன்னை துயில்கின்ற
இடமா
குலமானம் கொப்பளிக்கும்
குளமா – இல்லை
கொள்கைப்போர் உருவாக்கும்
களமா என்று
காண்போர் நெஞ்செல்லாம்
களிகொண்ட மயிலாக
ஆடுகிறது தலைவா!

நம்
பாட்டனும் பூட்டனும்
படைப்பித்த சிற்பங்கள்
உயிரூட்டி வரைந்து
ஒளிசெய்த ஓவியங்கள்
கரையுடைத்துப் புறப்பட்ட
காவிய வெள்ளங்கள் –
காலக் கொடையாய்க்
காணக் கிடைப்பதுபோல்
நாளை உலகுக்கும்
ஒரு
நம்பிக்கை நாயகன்
வாய்த்தான் என்று
வாயுறை வாழ்த்து
வளர்கிறது தலைவா!

இன்று மட்டும்
நீ வந்தால்..
எங்கள்
காந்தத் தலைவனைக்
கட்டிப் பிடித்து –
எங்கள்
சாந்தத் தலைவனைத்
தழுவி எடுத்து –
முத்துவேல் பேரனே
என்று
சத்தமிட்டு முத்தமிட்டு
சங்கப் பாண்டியனாய்
சாற்றுக் கவிபூட்டி
சத்தியமாய் நெகிழ்ந்திருப்பாய்!

உள்ளத்தில் வியர்வை சொட்ட
உழைத்தாய் என்பதனால்
கடற்காற்று வாங்கவா
நீ
கடற்கரைக்கு வந்தாய்!

காஞ்சித் தலைவன்
கற்பித்த பாடத்தை
அடிபிறழாமல்
அப்படியே பின்பற்றி
ஆட்சி செய்த
அற்புதத்தை
அவரிடம் சொல்லத்தானே
அற்புதனே..நீ வந்தாய்!

முன்பணி ஆற்றிய
மூதறிஞர் அவரிடம்
உன்பணி பற்றி
உரைக்கத்தானே
இந்தப்
பேரதிசயத்தைப்
பிரமாண்டமாக்கிப்
பெருஞ்சாதனை புரிந்துள்ளார்
உன்
பெருந்தக்க பிள்ளையும்!

ஆம் தலைவா..
வெள்ளைச் சோளமாய்
உள்ளம் படைத்தவர்
வெள்ளை வானமாய்
விரிந்து நிற்கிறார்
இப்போது!

எரி சினத்தோடு
இழிவுகள் துடைத்து
அரி சினத்தோடு
ஆரியம் உடைத்து
கரிசனத்தோடு
கடமைகள் செய்யும்
எங்கள்
திராவிடக் காவலர்
தீரர் தளபதி,
பொதுசனம் எல்லாம்
போற்றிப் போற்றித்
தரிசனம் காணத்தான்
தலைநகரில் உனக்கென்று
தனிக்கோயில் நிறுவியுள்ளார்!

தாதினும் இனியதமிழ்த்
தாதைநீ மகிழுமாறு
ஏதினும் சிறந்த சின்னம்
எடுத்துள்ளார் –
இணையற்ற நின்மகனார்!

கன்றி உள்ளம்
கதறி அழுது
ஒன்றும் தோன்றாமல்
உதிர்ந்து சரிந்த
உடன் பிறப்புகள் எல்லாம்
'நன்றி நன்றி'யென நாவலிக்கப்
பாடும்
நாமாவளி உனக்குக்
கேட்கிறதா தலைவா!

போதெலாம் தமிழ்நினைந்து
பொழுதெலாம் இனம்நினைந்து
காதெலாம் இசைகலந்து
கவித்துவ மழைகலந்து
தீதெலாம் தெறிக்கவிட்ட
திராவிடத் தலைவருக்கு
ஈதெலாம் சிறிய நன்றி
என்றன்றோ
காலம் சொல்லும்!

உள்ளே போய்த்
தொட்டால் நீ பேசுகின்றாய்
தூக்கம் கலைக்கின்றாய்
பொட்டில் அடித்தாற்போல்
போதனைகள் தருகின்றாய்
எட்டி அடிவைத்தால்
இழுக்கின்றாய் மறுபடியும்!
ஒட்டி நடைநடந்து
உயிர்வரைக்கும் போகின்றாய்!

கட்டுக் குலையாமல்
கழகம் காத்த கதை
பட்டுப் போகாமல்
பண்பாடு மீட்ட கதை
விட்டுப் போகாமல்
வீரம் வளர்த்த கதை
அத்தனையும் அங்கே
கண்ணாரக் கண்டவர்கள்
'ஆகாகா' என்று..
புத்தனைப்போல் தழுங்கும்
உன்
புதல்வரைத்தான்
போற்றுகின்றார்!

கடிது விரைவுக்குக்
காற்றைச் சொல்வார்கள்
காற்றைவிட மனமென்ற
கருத்தும் சொல்வார்கள்
இந்த
இரண்டைவிட வேகம்
எடுத்து இற்றைக்கு
நேற்றைவிடக் கூடுதலாய்
நெடிது வளர்ந்துள்ளார்
நீவளர்த்த பிள்ளை!

'வானெட்டித் தொடமுயலும்
அலைகள் எல்லாம்
உன்
வாழ்க்கையினைக் காட்டுகிற
நிலைகள்' என்று
நினைவூட்டி நிற்கிறது
உன்
நினைவாலயம்!

நீ அழகு!
எதிலும்
நேர்வகிடு எடுத்தவுன்
நிலையழகு!

முடியரசாய் இருந்தாலும்
முடியிழந்து போனாலும்
உன்
முகமழகு!

அக்கினியில் குளித்தாலும்
அருவியில் குளித்ததுபோல்
அலட்சியமாய் நடக்கும்
உன் அகமழகு!

அறையில் இருந்தாலும்
சிறையில் இருந்தாலும்
அவையில் இருந்தாலும்
சுவையில் குன்றாத
உன்
சுந்தரத் தமிழழகு!

அத்தனை அழகையும்
அணுவளவும் சிதறாமல்
மொத்தமாய் எடுத்து
முத்தாரம் தொடுத்து
வித்தாரமாய் விரித்து
வெளிச்சப் பெருவெளியை
உருவாக்கி உள்ளார் –
உன்
அறிவில் மலர்ந்த
அனிச்சப் பூவழகர்
எங்கள்
அருமைத் தலைவர்
தளபதி!

பார்க்கும் இடமெல்லாம்
பரவசக் காட்சிகள்!
ஆர்க்கும் கடலையும்
ஈர்க்கும் பரபரப்பு!

ஊர்க்கும் உலகுக்கும்
உரக்கச் சேதிசொல்லி
யார்க்கும் வியப்பளிக்கும்
யாதினும் இனிய
இமாலயப் படைப்பு!

'உன்னை அலங்கரித்து
உலகத் தமிழர்
உள்ளங்களை எல்லாம்
அலங்காரம் செய்துவிட்டார்
எங்கள்
ஆடவர் திலகம்' என்று
அகங்காரம் கொண்டு
நிற்கிறது –
அழகிற் சிறந்த
மெரினாக் கடற்கரை!

உடற்கரையில் ஊறிவரும்
உற்சாக உணர்வோடு
உரைக்கிறேன் தலைவா..
உப்புக் கடற்காற்று
உன்தமிழைச் செவியுற்றுப்
பொதிகைப் பூங்காற்றாய்ப்
போனாலும்
வியப்பில்லை
தலைவா!

சர்க்கரைத் திரளாய்ப்
பரந்து கிடக்கும்
பரவை மணல்வெளி,
எண்ணி முடியாத
உன்
எண்ணங்களின்
அடையாளமாகத்தான்
எங்களுக்குத் தெரிகிறது
தலைவா!

ஆழ்கடலுக்குக் குடைபிடிக்கும்
ஆகாயப் பெருவெளி
உன்
அறிவு வெளியின்
அகராதியாகத்தான்
கண்களில் விரிகிறது
தலைவா!

மலை குலைந்தாலும்
நிலைகுலையாத நெஞ்சர்
அலைகடல் ஓரத்தில்
அறிதுயிலில் இருக்கிறார்
என்பதை
அறிஞர் உலகம்
அறியும்படியாக
ஓர் அழகாலயத்தை
அமைத்திருக்கிறார்
எங்கள்
அறிவாலயத் தளபதி!

தேனும் நாணும்
தித்திப்புச் சொற்றொடர்கள்
திரையிலும் தரையிலும்
தீட்டியவன் நீ!

உரையிலும் நடையிலும்
ஊட்டியவன் நீ!

பாமரன் நெஞ்சையும்
பைந்தமிழ் கொண்டு
மீட்டியவன் நீ!

ஒருவரே அனைத்துமாய்
உலவும் வித்தையை
உலகத்துக்கே
காட்டியவன் நீ!

திசைகளை வெளுத்த
திராவிட இயக்கத்தில்
இரும்பாய் நுழைந்து
ஈட்டியாய் வெளிவந்து
ஈட்டிய புகழை
இமயம் வரைக்கும்
நீட்டியவன் நீ!

புதுமணம் வீசும்
பூப்போல் வார்த்தைகள்
பாப்போல் படைத்து,
பாட்டாளர் தமக்கும்
காப்போல் கொடுத்த
கலைஞர்களின்
கலைஞன் நீ!

பிரமிப்பூட்டும் பேனாவும்
செந்தமிழ்ச் சிரபுஞ்சியாய்க்
கொட்டித் தீர்க்கும்
செந்நாவும்
சீதனமாய்க் கொண்ட
சிங்கப் புலவன் நீ!

பொன்போற் சிறந்த
பூம்புகாருக்குப்
பொலிவூட்டினாய் நீ!
வான்புகழ் வள்ளுவருக்கு
வலிவூட்டினாய் நீ!

தன்னைத் தமிழுக்குத்
தானே தந்தவர்க்கும்
மண்ணைக் காக்க
மகிழ்வாய் வந்தவர்க்கும்
அணிபூட்டி அழியாத
ஆவணங்கள் செய்தாய் நீ!

உன்னை அணிசெய்து
உள்ளொளியால் சிறப்பிக்கத்
தன்னையே உருக்கித்
தமிழ்நாட்டைக் காக்கின்ற
அன்னையே நிகர்த்த
எங்கள்
ஆணரசன் வந்தானே..
அதுவன்றோ பேறு!

ஆயிரம் கூறு
இதைவிடப் பாக்கியம்
இல்லையே வேறு!

தலைவா...
அலைகளின் தாலாட்டும்
அண்ணனின் பாராட்டும்
அகிலத்தின் சீராட்டும்
நித்தம் உன்னை
நீராட்டும்!

யுத்த களத்திற்கு
வீரர்கள் வருவதுபோல்
சித்தத் துடிப்போடு
செந்தமிழர் வருவார்கள் –
உன்
நாடித் துடிப்புகளை
நாடிப் படிப்பதற்கு!

இனி
வாடிப் போகாது
வளர்பிறைத் தமிழகம்!
உன்னை
வணங்கும் போதும்
வாசிக்கும் போதும்
உணரும் போதும்
உருவாகும் புயலில்
உருக்குலைந்து போகாதா
உள்ளடி வேலைகள்,
ஒன்றிய மூளைகள்!

புத்துலகு நிர்மாணிக்கும்
போருணர்ச்சியும்..
பூபாளம் இசைக்கும்
பேருணர்ச்சியும்..

வடக்கை அடக்க
வலக்கை எடுக்கும்
வாளெனப் பாயும்
நேருணர்ச்சியும்..

சுயத்தை இழக்காமல்
சுயம்புவாய்க் கிளம்பும்
வீறுணர்ச்சியும்
மிக்கவர் அல்லவா
உன்
மேன்மைப் புத்திரர் –
இளைஞர்களின் மித்திரர்
எங்கள் தளபதி!

தந்தையை விஞ்சும்
தனயனாய் நிற்கும்
அவரின் துணைகொண்டு
அனைத்திலும் வெல்வோம்,
எங்கள்
ஆவிநிகர் தலைவா!

ஆயிரம் படைகொண்டு
அடக்குமுறை வந்தாலும்
ஒருமுறை சுற்றி
உன்
நினைவாலயம் வந்தால்
போதும் தலைவா..

அக்கினித் திராவகத்தை
அள்ளிக் குடிக்கும்
அசாத்திய ஆற்றலை
அங்கே
விதைத்து வைத்திருக்கிறார்
உன்
வீரத் தளபதி!

சுனாமியைக் கூடச்
சுருட்டி அள்ளும்
மகா சக்தியை
உன்
மகா மைந்தர்
அங்கே
மலர்த்தி வைத்திருக்கிறார்
தலைவா!

அமைதியாய் நீயுறங்கு
நீ மூட்டிய
அறிவுத்தீ உறங்காது!

நீ
ஏற்றிவைத்த கொடி
இறங்காது!

நீ நடந்த பாதை
விலகாது!
நீ வளர்த்த பயிர்
கருகாது!

மழைகொட்டித் தீர்த்தாலும்
மயில்வண்ணம் கரையாது!

அத்தனையும் காப்பார்
அவரே!
அவரைவிட்டால்
எமைக் காப்பார்
எவரே!

எல்லா வெற்றியும்
எல்லாப் புகழும்
இனிமேல் அவருக்கே!

உன்னை இந்த
உலகெலாம் உணர்த்திய
ஒப்பிலாத் தளபதி
எதிர்காலத்தில்
தன்னையும் வெல்வார்
இந்தத்
தரணியும் வெல்வார்!

இப்படிக்கு,
தளபதி முகத்தில்
தலைவனைக் காணும்
தனித்தொண்டன்...
தளபதியார்க்கு அடியேன்!




கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா எல்லோருக்கும் எல்லாம் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் நகரத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர், நகர மன்றத் தலைவர் டி.என்.முருகன் வரவேற்புரையாற்றினார். கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி, தலைமைக் கழகப் பேச்சாளர் சூர்யா வெற்றிக்கொண்டான் ஆகியோர் எழுச்சியுரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், நகர துணைச் செயலாளர் சக்திவேல், ஆர்.கற்பகம், டி.செல்வராஜ், கோபிகிருஷ்ணன், ஜி. ரவிச்சந்திரன், ஆ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.விஸ்வநாதன், பிரேமா அல்போன்ஸ், சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன், தனலட்சுமி உமேஷ்வரன், ஓம்சிவசக்திவேல், எஸ்.எஸ்.ராயல் அன்பு, அஞ்சுகம் கணேசன், இராஜிவ்காந்தி, குணா, மணிவண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




கடலூர் மேற்கு மாவட்டக் கழக, விருத்தாசலம் நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி, சார்பில் கழக அரசின் நிதிநிலை விளக்கம் மற்றும் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், விருத்தாசலத்தில் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். நகரச் செயலாளர் க.தண்டபாணி, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் ஜி.தண்டபாணி உரையாற்றினர். நகர மன்ற தலைவர்கள் , மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், நகரச் செயலாளர் க.தண்டபாணி, ஒன்றியச் செயலாளர்கள் மற்றும் இளைஞரணி, சார்பு பணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகி கலந்து கொண்டனர்.






## வாட்ஸ் அப்பில் வருவது அல்ல வரலாறு!

மதுக்கடைகளை நம்பித்தான் அரசு இருக்கிறது என்ற திரிபுவாதம் தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்டு, பொதுப்புத்தியிலும் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன எதார்த்தம் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான ஒரு சம்பவம் சமீபத்தில் நடந்திருக்கிறது. சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கடந்த 27, 28, 29 ஆகிய தேதிகளில், சென்னை இலக்கியத் திருவிழா, இளைஞர் இலக்கிய விழா நடைபெற்றது.

அதில், 'தமிழ்நாட்டின் பொருளாதாரம்' எனும் தலைப்பில் திட்டக்குழுத் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பேசினார். பின்னர் மாணவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், மாணவர் ஒருவர் “மதுக்கடைகள் மூலம்தான் அரசின் பொருளாதாரம் இருக்கிறதே!” என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த ஜெயரஞ்சன், “அரசின் வருமானம் 3 இலட்சம் கோடி ரூபாய்; ஆனால், டாஸ்மாக்கின் மூலம் வரும் வருவாய் அதில் 15 ஆயிரம் கோடி ரூபாய்தான். ரூ.3 லட்சம் கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? வெறும் 15 ஆயிரம் கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? கல்லூரி மாணவர்கள் உண்மை தெரியாமல் பேசலாமா? இது எவ்வளவு அபத்தமாக இருக்கிறது?” எனக்கூற மாணவர்கள் உண்மையை உணர்ந்தனர்.

## ஃப்ளாஷ்பேக்



தனலட்சுமி



### தினம் ஒரு கடிதம்!

என் தந்தை வழக்கறிஞர் விஜயராமன் அவர்கள் 54 ஆண்டு காலம் தி.மு.கழகத்துக்காக உழைத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தினம் ஒரு கடிதம் எழுதுவதைத் தனது வாழ்நாள் பழக்கமாகக் கொண்டிருந்தார். என் தந்தை, கம்பம் வட்டச் செயலாளராக இருந்த போது 1990- ஆம் ஆண்டு கலைஞரைச் சந்தித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. “சாகும்போது நான் எழுதும் கடிதம் மறுநாள் கலைஞரின் கைகளில் கிடைக்க வேண்டும். அது போதும் எனக்கு” என்று வாழ்ந்த என் தந்தையை நினைத்தால், எனக்குப் பெருமையாக இருக்கிறது.

**–வி.தனலட்சுமி, கம்பம்,**
**தேனி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in


## கருவூலம்

### பெரியாரின் தொலைநோக்கு!

1937-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியைச் சந்தித்தது. நீதிக்கட்சியின் தோல்வியை ஒரு தரப்பினர் வரவேற்றுக் கொண்டாடினர். அதைப் பார்த்த பெரியார், “நீதிக்கட்சி இன்று தோற்கடிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அதன் கொள்கைகளும் குறிக்கோளும் எந்தக் காலத்திலும் தோற்கடிக்கப்பட மாட்டாது” எனக் குறிப்பிட்டார். பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனைதான் 1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சியைப் பிடித்தது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 1





## சமூக நீதிக்கான குரல்!

‘எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும்’ என்பதே திராவிட மாடல். இந்த உயர்ந்த இலட்சியத்தை நோக்கி, தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். ஆனால், புராண காலம் தொட்டு இன்றுவரை அனைவருக்கும் அனைத்தும் சமமாகக் கிடைக்கவில்லை. ஆதிக்க வகுப்பார் நாட்டின் வளங்கள் அனைவருக்கும் கிடைத்துவிடாமல், தடுக்கும் அநீதியும், அந்த அநீதியை எதிர்க்கும் சமூக நீதிப் போராட்டமும் வரலாறு நெடுகத் தொடர்கிறது. அதில் ஒரு பகுதி இடஒதுக்கீட்டுக்கான போராட்டம்.

தங்கள் ஆதிக்கத்தைத் தொடர விரும்புபவர்கள் ஒரு வர்க்கமாகவும், அவர்களின் அநீதியான ஆதிக்கத்தை எதிர்ப்பவர்கள் ஒரு வர்க்கமாகவும் எதிரெதிர் திசையில் நின்று மோதுவதை, “இன்று வரையிலான வரலாறு முழுவதும் வர்க்கப் போராட்ட வரலாறே” என்றனர் கார்ல் மார்க்ஸும் ஏங்கெல்சும். வர்க்கப் போராட்ட வரலாற்றை இந்தியச் சூழலில் பார்ப்பனியத்துக்கும் பௌத்தத்துக்கும் இடையேயான மோதல் என்றார் அண்ணல் அம்பேத்கர்.

‘எங்களுக்கு மட்டுமே கல்வி கற்கும் அறிவும் உரிமையும் உண்டு’ என்பது மோசடியான இடஒதுக்கீடு. ‘அறிவை விரிவுசெய்’ என்பது நியாயமான அறிவுப் பங்கீட்டுக்கான போர்க்குரல். ‘மதிப்புமிகு வேலைகளைச் செய்வது எங்கள் பிறப்புரிமை’ என்பது அநீதியான இட ஒதுக்கீடு. ‘கண்ணியமான வேலைவாய்ப்பு எங்களுக்கும் வேண்டும்’ என்று போராடுவது நீதியை நிலைநிறுத்த கோரும் உரிமைக்கான இட ஒதுக்கீடு.

நீண்டகாலம் இந்துக்களின் சட்டநூலாக விளங்கிய மனுதர்மம், வேதங்கள் ஓதுதல், கற்பித்தல், யக்ஞங்கள் செய்தல், செய்வித்தல், தானம் கொடுத்தல், வாங்குதல் ஆகிய ஆறு தர்மங்களை, பிராமண வர்ணத்துக்கு ஒதுக்கியது. ஒரு வகுப்பாரின் ஆதிக்கத்துக்கு வழிவகுக்கும் ஒதுக்கீடு இது. நான்காம் வர்ணமாகிய சூத்திரர்களுக்கு மனு ஒதுக்கிய தர்மம் என்னவெனில், முதல் மூன்று வர்ணத்தாருக்கு (பிராமணர், ஷத்திரியர், வைசியர்) பணிவிடை செய்வதே ஆகும். இது ஒரு வகுப்பாரின் நலன்களுக்கு எதிரான ஒதுக்கீடு. தங்களுக்கு ஒதுக்கப்பட்டத் தர்மங்களை மீறும் சூத்திரர்கள் தண்டிக்கப்பட்டனர். சூத்திர வர்ணத்தில் பிறந்த சம்புகன், தனக்கு ஒதுக்கப்பட்ட வர்ண தர்மத்தை மீறி தவம் செய்ததற்காக இராமனால் தண்டிக்கப்பட்டான்.

சூத்திரன் தவம் செய்யக்கூடாது என்று மனுதர்மம் வகுத்த மோசடியை மீறி, தவம் செய்ததற்காக சம்புகன் தண்டிக்கப்பட்டான். சூத்திரனாய் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக, ஏகலைவனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்கத் துரோணர் மறுத்தார். இதை ஏற்றுக்கொள்ளாத ஏகலைவன் மறைந்திருந்து வில்வித்தை கற்றான். சூத்திரன் வில்வித்தை கற்றுக்கொள்ளக் கூடாது என்பது அநீதி. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற ஏகலைவனின் குரல், ஆதிக்கத்தை எதிர்க்கும் உரிமைக்குரல்.

அநீதியை ஏற்றுக்கொள்ள மறுத்து, உயிரைத் தியாகம் செய்து போராடிய பலரின் கதையை வரலாறு பதிவு செய்துள்ளது. அநீதியான இட ஒதுக்கீட்டை எங்கள் உயிரைக் கொடுத்தேனும் எதிர்த்து, நியாயமான இடஒதுக்கீட்டை வகுப்போம் என்பதே அவர்களின் தியாகத்தில் இருந்து நாம் கற்கும் பாடம்.

அனைத்திலும் அனைவருக்கும் உரிமை உண்டு என்பது நீதி. எங்களுக்கு மட்டுமே அறிவும் வளமும் உண்டு என்பது அநீதி. அநீதிக்கு எதிரான போர்க்குரலின் சட்டவடிமே இடஒதுக்கீடு. அதன் வரலாற்றைப் புரிந்துகொள்வது, நாம் இன்று அடைந்துள்ள உயரங்களுக்குப் பின்னால், நமது முன்னோடிகள் பட்ட காயங்களை அறிந்து கொள்வது சமூக நீதி களத்தில் தொடர்ந்து செயலாற்ற நமக்கு பாடமாக இருக்கும். அந்த வரலாற்றை வாராவாரம் அறிய தரும் ‘எல்லோருக்கும் எல்லாம்’.

–குரல் ஒலிக்கும்

# மாநாடு

**ர.பிரகாசு** 1





ஓவியம் : கி.சொக்கலிங்கம்

## அரசியல் விழிப்புக்கு ஒரு வழி!

ஒரு நாட்டின் அரசியலுக்கும் இன்னொரு நாட்டின் அரசியலுக்கும் வேறுபாடுகள் இருக்கலாம். ஒரே நாட்டுக்குள்ளேயே ஒரு மாநிலத்துக்கும் இன்னொரு மாநிலத்துக்கும் அரசியல் தட்பவெப்பம் மாறுபடலாம். ஒரு மாநிலத்துக்குள்ளேயே கூட ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் வித்தியாசங்கள் பல இருக்கலாம். ஆனால், உலகம் முழுக்க அரசியல் கட்சிகளுக்குள் வேறுபாடு இல்லாத ஒன்று ‘மாநாடு’.

19-ஆம் நூற்றாண்டில்தான் உலகம் முழுக்க அரசியல் மாநாடுகள் அதிகம் நடக்கத் தொடங்கின. ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை 1766-ஆம் ஆண்டிலேயே ஹார்ட்போர்ட் நகரில் முதல் அரசியல் மாநாடு நடந்ததாக வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. இந்தியாவில் 1888-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடந்த ‘முதல் இந்திய தேசிய சங்க அமர்வ்’தான் முதல் மாநாடாக அறியப்படுகிறது.

தொண்டர்கள், நிர்வாகிகளைக் கூட்டி கொள்கைகள், லட்சியங்களை அறிவிப்பது, அரசுக்குத் தீர்மானங்களை வலியுறுத்துவது, மக்களுக்குத் தங்கள் கட்சியின் பிரகடனங்களை அறிவிப்பது என மாநாடுகளுக்கு என்று தனி வரையறை உலகம் முழுக்க இருக்கிறது. அப்படித்தான் தென்னிந்தியாவிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் மாநாடுகளை மிக முக்கிய கருவியாகக் கையிலெடுத்தது.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் சுதந்திர வேட்கை வீறு கொண்டெழுந்த சமயம். இந்தியத் துணைக்கண்டம் முழுக்கப் பற்றியெரிந்த அந்த நெருப்பு தமிழ்நாட்டிலும் கொழுந்துவிட்டு எரிந்தது என்றாலும் கூட, ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெறுவது மட்டுமே போதுமானது எனக் கருதவில்லை தமிழ்நாடு. ஆங்கிலேய ஆதிக்கத்தோடு, ஆரிய ஆதிக்கத்தையும் ஒழித்து, சமத்துவம்- சமூக நீதி- சம உரிமையும் பெறப்பட வேண்டுமென்ற வேட்கையும் தமிழ்நாட்டில் ஊற்றெடுத்தது. அதற்கான முதல் ஊன்றுகோலை நீதிக்கட்சி நட்டது. பின்னர் அது பெரியாரால் திராவிடர் இயக்கமாய் பரிணமித்தது. பேரறிஞர் அண்ணா- முத்தமிழறிஞர் கலைஞரால் திராவிட அரசியலாக வீறுகொண்டு எழுந்தது அந்த சுயமரியாதை வேட்கை.

இந்தச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் திரும்பத் திரும்பப் பேசியும், இயங்கிக் கொண்டே இருந்ததால்தான் இன்றைக்கும் சுயமரியாதை உணர்வை தமிழ்நாடு இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு திராவிட இயக்கம் பயன்படுத்திய ஆயுதங்களில் மிக முக்கியமானது ‘மாநாடுகள்’. இன்றைக்கு தமிழ்நாடு வாய் நிரம்ப அழைக்கும் ‘பெரியார்’ என்ற பட்டமே 1938 தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் பெரியாருக்குக் கொடுக்கப்பட்டது.


ஒருகாலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்குக் கூடப் போய் சேராதிருந்த திருக்குறள் இன்றைக்கு உலகப் பொதுமறை. அதற்கு மிக முக்கியக் காரணம் பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடுகள். ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு கொடுக்க வேண்டுமென்று, செங்கல்பட்டு, 1929 முதல் சுயமரியாதை மாநாட்டில் பெரியார் இயற்றிய தீர்மானம்தான், கலைஞர் ஆட்சியில் சட்டமானது. இப்படி நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கி, இன்றுவரை திராவிட இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் சட்டங்களாகி உள்ளன. அந்த மாநாடுகள் எல்லாம் இன்றைக்கு வரலாறுகளாகி இருக்கின்றன.

அத்தகைய வரலாற்றை இன்றைய இளம் தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கிற முயற்சியே ‘மாநாடு’ தொடர். வாரம் ஒரு வரலாற்றை வாசிப்போம் இனி!

## திராவிடத்தால் வாழ்கிறோம்

409

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




–வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131